ஹரி ஸர்வோத்தம ! வாயு ஜீவோத்தம !!

ஸ்ரீ கு[3]ருலீலா விலாஸ

(ஸோதெ[3] மட[2]த[3] ஸ்ரீ விஶ்வப்ரிய தீர்த[2]ரு குறித்து)

ரசனெ: :
ஸ்ரீ எல்லத்தூர் ஸேதுமாத[4]வாசாரார்ய ஸூரி
(அங்கித: விஜய ஹயக்[3]ரீவ)

தொகுத்தவர்:
V. ராமமூர்த்தி
பொள்ளாச்சி - 642002
அ.பே.: 81053 13369

வெளியிடுவோர்:
ஸ்ரீ ஹயவதன சேவா ஸமிதி
அக்ரஹாரம், சிங்காநல்லூர்
கோயமுத்தூர் - 641 005

ஸ்ரீகுருலீலாவிலாஸ

உடுப்பி ஸோதெ மடத்தின் குருகளான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் என்னும் ஸ்ரீவிஶ்வப்ரிய தீர்த்தரின் சரிதாம்ருதம்

கன்னடத்தில் உள்ள க்ருதிகளை
தமிழில் மொழிபெயர்த்தவர் :

ஸ்ரீ. v.ராமமூர்த்தி
எண் 3/241, ஸூர்யா நகர்
போஸ்டல் காலனி, மஹாலிங்கபுரம் PO
பொள்ளாச்சி 642002
கோயமுத்தூர் மாவட்டம்
அ.பே. எண் 81053 13369

ஸ்ரீவிஸ்வாவஸு நாம ஸம்வத்ஸரம், தக்ஷிணாயனம், க்ரீஷ்ம ருது, ஆஷாட மாஸம், க்ருஷ்ண பக்ஷம், 24.07.2025 அமாவாசை, வியாழக்கிழமை, ஸ்ரீவிஶ்வப்ரிய தீர்த்தர் (ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார்), ஸோதெ மடம், உடுப்பி அவர்களின் மத்ய ஆராதனை தினத்தன்று, ஸ்ரீஹரிவாயு குருகளின் அனுக்ரஹத்தால் இப்புத்தகம் வெளியிடப்பட்டது.

ப்ரதியின் விலை ரூ. 30/- மட்டுமே
(கூரியர் / தபால் செலவு தனி)

ப்ரதிகள் கிடைக்கும் இடம்:

ஸ்ரீ s.பாலாஜி
'விஶ்வப்ரிய விலாஸ'
3, வடக்கு வீதி, அக்ரஹாரம்,
சிங்காநல்லூர், கோயமுத்தூர் : 641005
அ.பே.எண் 98420 38404

ஹரி ஸர்வோத்தம | வாயு ஜீவோத்தம ||

நன்றி | நன்றி | நன்றி

உடுப்பி ஸோதெ மடத்தை சேர்ந்த ஸ்ரீவிஶ்வப்ரிய தீர்த்தர் என்கிற ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் குருலீலா விலாஸ என்ற அவரது ஜீவன சரித்திரத்தை, கன்னட மொழியில் எல்லத்தூர் ஸ்ரீஸேதுமாதவாசார்ய ஸுரி அவர்கள் இயற்றிய க்ருதியை தமிழில் வெளியிட உதவிய ஸ்ரீ V.ராமமூர்த்தி, பொள்ளாச்சி அ.பே.எண் 81053 13369 அவர்களுக்கும்,

இந்த புத்தகத்திற்கு அர்த்தங்களுடன் விளக்கம் மற்றும் வாழ்த்துரையும் வழங்கிய 'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன், பெங்களூரு, அ.பே. எண் 8904458276 அவர்களுக்கும்,

இந்தப் புத்தகம் வெளியிட பொருளுதவி செய்த அனைத்து பகவத் பக்தர்களுக்கும் நமது ஸமிதியின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

15/7/2025 **ஜெ.முரளிதரன்**

ஸ்ரீஜயதீர்த்தரின் புண்யதினம் 'பவன ஸதனா'

பி.எண். 107, குமரன் கார்டன்

பேஸ் II, 3வது வீதி

கொண்டையம்பாளையம் ரோடு

வையம்பாளையம் 641110

அன்னூர் தாலுகா, கோவை மாவட்டம்

அ.பே. எண் 95002 88035

ஸ்ரீவிஶ்வப்ரிய தீர்த்தர்
(ஸ்ரீவிருந்தவனாச்சார்யார்)

ஸோதே மடத்தின் குரு பரம்பரையில் ஸ்ரீவிஷ்ணு தீர்த்தருக்குப் பிறகு 32வது துறவி - ஸ்ரீவிஶ்வப்ரிய தீர்த்தர் .

இயற்பெயர் : ஸ்ரீனிவாஸா.
அவதரித்த இடம் : உடுப்பி அருகில் இன்னா.
தந்தையின் பெயர் : ஸ்ரீகிருஷ்ணாசார்யார்.
ஸன்யாஸம் பெற்றது : தனது 10வது வயதில்.
ஆசிரம குரு: ஸ்ரீ விஶ்வேச தீர்த்தர்
வித்யா குரு: பரமகுருவான ஸ்ரீவிஶ்வாதீஶ்வர தீர்த்தர்
ஆஸ்ரம சிஷ்யர்: ஸ்ரீ விஶ்வாதீஶ தீர்த்தர்
ஆராதனை: ஆஷாட அமாவாசை
பிருந்தாவனம்: உடுப்பி.
காலம் : 1774-1865
பீடத்தில் ஆட்சி செய்த ஆண்டுகள் : 62
உடுப்பி ஸ்ரீகிருஷ்ணனின் பர்யாயம் : 4 முறைகள்
பர்யாய ஆண்டுகள்: 1804-05, 1820-21, 1836-37 & 1852-53

பரமகுருவான ஸ்ரீவிஶ்வாதீஶ்வர தீர்த்தரிடம் ஆரம்ப கல்வியினை கற்றபின், மேலதிக கல்வியைக் கற்ற எங்கு செல்வது என்று நினைத்திருக்கையில், ஸ்ரீவாதிராஜரே இவரது கனவில் வந்து இவரை ஸோதே வருமாறு ஆணையிட்டார். அதன்படியே இவரும் சென்று ஸ்ரீராஜரின் பஞ்ச வ்ருந்தாவன ஸன்னிதியில் தன் சேவையை செய்து கொண்டிருந்தார். அங்கு கடுமையான வைராக்கியத்துடன், மிகக் குறைந்த அளவான உணவையே உண்டு வந்தார். ஸ்ரீராஜரின் பிருந்தாவனத்தின் முன் அமர்ந்து ஸர்வமூல க்ரந்தங்களை படிக்கையில், பிருந்தாவனத்திலிருந்து

ஸ்ரீராஜரே இவரது சந்தேகங்களை நிவர்த்தி செய்தார். இதனாலேயே இவர் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் என பெயர் பெற்றார். ஸ்ரீராஜரின் ஸிஷ்யரான ஸ்ரீவேதவேத்ய தீர்த்தரின் சேவையும் செய்து, அவரது ஆசிகளையும் பெற்றார்.

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் தனது திக்விஜய பயணத்திற்கு செல்ல வேண்டும் என்று, அதற்கான அனுமதியை ஸ்ரீராஜரிடம் கேட்க, அவரது பிருந்தாவனத்திலிருந்து திவ்ய மந்த்ராக்ஷதை இவரது தலையில் விழுந்தது. ஸ்ரீராஜரின் அனுமதியும் கிடைத்தது.

ஸ்ரீராஜரின் காலத்தில், இவர் ஒரு காது கேட்காத, பேச முடியாத ப்ராஹ்மணனாக பிறந்திருந்தார். ஸ்ரீராஜரின் பிருந்தாவன ப்ரவேசம் ஆனபின், மகிமை பொருந்திய ஸ்ரீவ்ருந்தாவனாக்யான க்ரந்தத்தின் பாடத்தினை, தன் கனவில் கேட்டார். அந்த க்ரந்தத்தை ப்ரசாரம் செய்யவே, அடுத்து ஸ்ரீஹரிவாயு குருகளின் அனுக்ரஹ பலத்தினால் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாராக அவதரித்தார்.

தன் ஸிஷ்யர்கள் மேல் அபாரமான கருணை கொண்ட ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், தினமும் தன் கைப்பட பல க்ரந்தங்களை எழுதி, அவர்கள் படிப்பதற்காக கொடுத்து வந்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பலரும் வந்து இவரிடம் ஸர்வமூல க்ரந்தங்களை படித்து, ஸிஷ்யர்கள் ஆயினர்.

மைஸூரு மற்றும் கொச்சின் அரசர்களால் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் சிறப்பாக கௌரவிக்கப்பட்டார். மைஸூரு மகாராஜாவான மும்மடி கிருஷ்ணராஜ ஒடெயர், இவருக்கு ஒரு அற்புதமான மரகத மண்டபத்தை சமர்ப்பித்தார். ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் பர்யாய

காலத்தில், ஸ்ரீகிருஷ்ணனுக்கு பற்பல சிறப்பு ஆபரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் வைராக்கியம் மிகவும் அபாரமானதாக இருந்தது. பர்யாய தர்பாரில் அமர்ந்திருந்தபோதும் அவர் வெறும் கௌபீனம் மட்டுமே அணிந்தவராக இருந்தார். ஸ்ரீவிஷ்ணு தீர்த்தர் போன்ற வைராக்ய சிரோமணியின் பரம்பரையில் வந்தவரான இவர் இவ்வாறு இருப்பது சரியானதே என்று ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமி மடத்தின் அன்றைய பீடாதிபதியான ஸ்ரீபுவனேந்த்ர தீர்த்தர் கூறினார்.

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் நிகழ்த்திய அற்புதங்கள் பற்பல உள்ளன. அவற்றில் பல இந்த க்ருதியில் சொல்லப்பட்டுள்ளன.

இவரைப் பற்றி எழுதப்பட்ட க்ருதிகள்:

1. ஸ்ரீவிஶ்வப்ரிய விலாஸா - ஸ்ரீ கொச்சி ரங்கப்பாச்சாரியார் அவர்கள் எழுதியது

2. ஸ்ரீவிஶ்வப்ரிய குரு லீலாவிலாஸ - ஸ்ரீமத் வேதகர்ப ஸேதுமாதவ ஸூரி அவர்கள் ஸம்ஸ்க்ருதத்தில் மற்றும் கன்னடத்தில் எழுதியது. இவர் தமிழ்நாட்டில் சிதம்பரம் அருகில் உள்ள எல்லத்தூர் கிராமத்தை சேர்ந்தவர். ஸ்ரீவ்ருந்தாவனாசார்யர் தனது சாதுர்மாஸ விரதத்தை, கண்ணபிரானடியில் செய்தபோது அங்கு தங்கியிருந்து ஸ்ரீமதாசார்யாரின் ஸர்வமூல க்ரந்தங்கள் அனைத்தையும் கற்றவர். ஸம்ஸ்க்ருத க்ரந்தம், 5 அத்தியாயங்களில் மொத்தம் 162 ஸ்லோகங்களைக் கொண்டது. கன்னட க்ருதியோ, 136 பத்யங்களைக் கொண்டதாக இருக்கிறது.

மேற்சொன்ன ஸம்ஸ்க்ருத க்ருதியின் ஆங்கில விளக்கமானது, திரு. அனந்தேஷ் ஸேதுமாதவ ராவ் அவர்களால் 2022ம் ஆண்டு புத்தகமாக வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய இந்த கன்னட க்ருதியின் புத்தகத்தின் அர்த்தத்தை எழுதுவதற்கும் திரு. அனந்தேஷ் அவர்களின் புத்தகம் மிகவும் உதவியிருக்கிறது. அதற்காக அவருக்கு மிகப்பெரிய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உலகில் 91 ஆண்டுகள் வரை இருந்த ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், 1865ம் ஆண்டு, ஆஷாட அமாவாசையன்று உடுப்பியில் பிருந்தாவனஸ்தர் ஆனார். அன்றிலிருந்து, ஸ்ரீஹயக்ரீவ ஸ்வாமியின், ஸ்ரீமதாசார்யாரின், ஸ்ரீவாதிராஜரின் மற்றும் தன் பக்தர்களுக்கு, ஸிஷ்யர்களுக்கும் கேட்ட வரங்கள் அனைத்தையும் வழங்கி, பிருந்தாவனத்திலிருந்து தொடர்ந்து அருள் பாலித்து வருகிறார்.

இந்த கன்னட க்ருதியின் மூல பத்யங்களை, கன்னடத்திலிருந்து தமிழில் டைப் செய்து, 1-2-3-4 என்று குறித்துக் கொடுத்து, என் வேலையை எளிதாக்கிய பொள்ளாச்சி திரு. V.ராமமூர்த்தி (அலைபேசி எண்: 81053 13369) அவர்களுக்கு மிக்க நன்றிகள்.

அப்படியே இந்த அர்த்தங்களை தயார் செய்த பின், முழுவதுமாக படித்துப் பார்த்து, பிழைகளை திருத்திக் கொடுத்த கோவை திரு. J.முரளிதரன் (அலைபேசி எண்: 95002 88035) அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

தமிழ்நாட்டில் போளூர் அருகில் கரப்பூண்டி கிராமத்தில் பிருந்தாவனஸ்தர் ஆகியிருக்கும் ஸ்ரீஸங்கர்ஷண

ஒடெயரு, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் ஸிஷ்யர் ஆவார். ஸர்வமூல க்ரந்தங்களை கற்க வேண்டும் என்னும் விருப்பத்தில், உடுப்பி சென்ற இவர், குருகளிடம் அனைத்தையும் கற்று மங்களம் செய்தார். ஸிஷ்யரின் வைராக்கியத்தையும், குரு பக்தியையும் பார்த்து, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் இவரை வெகுவாக புகழ்ந்து, அருளியுளார். பிறகு, ஸ்ரீஸங்கர்ஷண ஒடெயரு, குருவின் அருளால், ஸ்ரீஜகன்னாத தாஸரின் ஹரிகதாம்ருதஸாரத்திற்கு முதல் உரையை ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றி, ஸ்ரீஹரியின் மிகப்பெரிய சேவையை செய்தார்.

கன்னட ஹரிதாஸ ஸாஹித்யத்தின் இன்னொரு சிறப்பான க்ருதியான இந்த 'ஸ்ரீகுருலீலா விலாஸ' க்ருதியை அனைவரும் பக்தியுடன் பாராயணம் செய்ய வேண்டுமென்று, இந்த புத்தகத்தினை ஸ்ரீஹயவதன சேவா ஸமிதி, அக்ரஹாரம், சிங்காநல்லூர், கோயமத்தூர் - 5 அவர்கள் வெளியிட்டுள்ளனர். அதன்படியே நாமும் இந்த க்ருதியை பாராயணம் செய்து, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின், ஸ்ரீராஜரின் மற்றும் அவர்களின் அந்தர்யாமியான ஸ்ரீஹயக்ரீவ ஸ்வாமியின் அருளைப் பெறுவோமாக.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

சத்ய நாராயணன்
11.06.2025

ஸ்ரீவேதகர்ப்ப ஸேதுமாதவஸுரி அவர்கள் இயற்றிய ஸ்ரீமத்விஷ்வப்ரிய குருலீலாவிலாஸ க்ருதியின் மங்களாசரண ஸ்லோகம்

[ஸம்ஸ்க்ருத க்ருதி]

வந்தே³ऽஹம் க³தஸந்தே³ஹம் சித்தே³ஹம் ஸ்ரீஶமன்வஹம் |
கோ³தோ³ஹம் வேத³ஸந்தோ³ஹம் கந்தே³ஹம் கைடபா⁴பஹம் ||

[கன்னட க்ருதி]

கேளே இவன லீலெ - பா³லே பேளுவனல்லெ ||ப||
ஸல்லோக கு³ருலீலெ - கெல்லாவு கேளி ப³ல்லெ
எல்லாவு வரலோலெ - ப³ல்லார பூர்வ எலெ ||அ.ப||
வாதி³ராஜர ப்ரியா - நந்த³ தீர்த²ர ஶுத்³த⁴
ஹ்ருத³ய த³ல்லித்³த³ ஶ்ரீ - ஸத³னகெ³ வந்தி³பெ ||

ஹரி ஸர்வோத்தம ! வாயு ஜீவோத்தம !!

ஶ்ரீ கு³ருலீலா விலாஸ

(ஸோதெ³ மட²த³ ஶ்ரீ விஶ்வப்ரிய தீர்த²ரு குறித்து)

ரசனெ: :
ஶ்ரீ எல்லத்தூர் ஸேதுமாத⁴வாசாரார்ய ஸூரி
(அங்கித: விஜய ஹயக்³ரீவ)

கேளே இவன லீலெ பா³லே
(தீ³ர்க⁴ க்ருதி)

கேளே இவன லீலெ - பா³லே பேளுவனல்லெ ||ப||

ஸல்லோக கு³ருலீலெ - கெல்லாவு கேளி ப³ல்லெ
எல்லாவு வரலோலெ - ப³ல்லார பூர்வ எலெ ||அ.ப||

வாதி³ராஜர ப்ரியா - நந்த³ தீர்த²ர ஶுத்³த⁴
ஹ்ருத³யத³ல்லித்³த³ ஶ்ரீ - ஸத³னகெ³ வந்தி³பெ ||1||

தெளலவ மண்ட³லதி³ குலத³ மஹீஸுர - நிலயதி³ ஜனிஸி
காலதி³ த்³விஜனாத³ ||2||

வேத³வ விப்ரனல்லி ஓதி³த³ ப்³ரஹ்மசாரி
ஶுத்³த⁴ காவ்யவனோதி³ - ஸுதெ⁴யாத³ வினோதி³ ||3||

விஶ்வேஶ பூஜெகா³கி³ விஶ்வேஶ தீர்த²ரிந்த³
விஶ்வப்ரியனு எந்து - விஶ்வாஸி யதியாத³ ||4||

ஶிரத³ல்லி நிர்மால்ய கொரளல்லி அக்ஷமாலெ
உத³ரதி³ பத்³மக³ந்த⁴ - கரதி³ ஜப ஸர ||5||

கடிஸூத்ர லங்கோ³டி - ஶாடி ஸுத³ண்ட³ ஜ(z)ரி
வத்³தி³கெ³ தா த⁴ரிஸி - படு ஹம்ஸ தோரித³ ||6||

தி³னகரனோபாதி மணெயல்லி பொளெவ - முத்³து³ –
சின்ன யதிய கண்டு³ - ஜன பெரகா³கி³து ||7||

எல்லரு இவர பாத³ ஜலஜவ தொளெது³ - ஆ
ஜலவ ஶிரத³ல்லி தளது³கொண்ட³ராக³ ||8||

கு³ருக³ளிட்ட ஆஞ்ஜெய - ஶிரபா³கி³ த⁴ரிஸி
வர கு³ரு ஸேவெய பூரைஸித³ரனுதி³ன ||9||

வ்ருத்³த³ பரமகு³ரு - ஶுத்³த⁴ ஸன்னிதி⁴யல்லி
இத்³து³ கெலவு கால - ஒதி³த³ மத்⁴வ ஶாஸ்த்ர ||10||

ப⁴க்தி விரக்தியல்லி - ஈதகெ³ ஸம பா³ல
யதியு இல்லவெந்து³ - கீர்திய பெ³ளகி³த³ ||11||

அனஶன நேமதி³ மௌனியாகி³த்³து³ மத்து
அன்னவ ஸ்வல்பவ உண்டு³ - ஜனக்கெ புண்யவித்த ||12||

வ்ருத்³த³ர வஶனாகி³ - ஸித்³த⁴னு ஒந்து³ பா⁴ரி
முத்³து³ க்ருஷ்ண பாத³ - மொத³லு பூஜிஸித³ ||13||

எத்³து³ ஸோதெ³கெ³ போகி³ - ராஜர வ்ருந்தா³வனத³ முந்தெ³
ஒதி³த³கி³வகெ³ அர்த² ஶப்³த³வு கேளிதந்தெ ||14||

தே³ஶ தே³ஶதி³ ப³ந்த³ தா³ஸ ஜனரிகெ³ல்ல
ஶீஶன மஹிமோபதே³ஶவ மாடி³த³னு ||15||

மூருலோகவனாள்வ ஸுரேந்த்³ரனந்தெ தபோ
வரவ மாடி³ முனி தீ⁴ரனெந்தெ³னிஸித³ ||16||

த⁴வள க³ங்கா³ தீர த்ரிவிக்ரமனுத்ஸவ அவப்⁴ருத²
நடெ³ஸி
தி³விஜ னந்தொ³ப்பித³ ||17||

கு³ரு வாதி³ராஜர வரதி³ வஸதி³ பூ⁴ஸுரரிக³ன்ன வஸ்த்ர
ஸுரிஸித னுதா³ர ||18||

நித்யத³ல்லன்னதா³ன மத்து நடெ³வுத³க்கெ
ஸுத்து பூ⁴மிய
வ்ருத்³தி³ ஈத மாடி³த³ த⁴ன்ய ||19||

பூ⁴மிய ஸீமெ தப்பி காமிஸி ப³ந்த³வர வர்மாஸி சர் -
மதா⁴ரி ஸ்தோம தோரோடி³ஸித³ ||20||

பர நிக்³ரஹத³ல்லி கு³ருராஜரிட்ட ஶ்ரீ நாராயணார்ய
பூ⁴த நிருதவிஹனில்லி ||21||

து³ருள மாயிபி³க்ஷு ப³ரத³ பூர்வபக்ஷ ஸரிநோடி³
ஸ்வபக்ஷ
ப³ரஸிதனீ த³க்ஷ ||22||

பஞ்ச ப்³ருந்தா³வனக்கெ கு³ருவந்த³ன மாடு³வாக³
ஒந்த்³-ஹிடி³ மந்த்ராக்ஷதெ ப³ந்து³ ஶிரதி³ பி³த்தே ||23||

கு³ருராஜர கர ஸரஸிஜ ஸஞ்ஜாத
வரத³ வேத³வேத்³ய சரணக்கெரகி³த³ ||24||

வந்தி³ஸி கு³ருத்³வய பாத³வ ஸித்³த³னாகி³ ப³ந்த³னு
உடு³பிகெ யாத³வ பூஜெகா³கி³ ||25||

பட்ட ஸிம்ஹாஸனதி³ இட்டு ராஜர பாத³பீட²
ப⁴ரதனந்தெ
தி³ட்ட ஸேவகனாத³ ||26||

கோல ஶ்ரீ வாஜிமுக² பா³லகிருஷ்ணர பூஜெ
கால தப்பதெ³ மாடி³ பா³ளித³ மஹாராய ||27||

வீக்ஷிஸி ராஜ கொட்ட லக்ஷ த்³ரவ்யவ கு³ரு
லக்ஷ்ய மாட³தெ³ த⁴ர்ம பக்ஷிக்கெ ஸுரெபி³ட்டனு ||28||

ஸரள பு⁴வனேந்த்³ர கு³ரு மொத³லெல்லரு
த⁴ரேயொளிவகெ³ணெ யாரில்லவெந்த³ராக³ ||29||

ப³த³ரீவாஸ கொட்ட ஶுத்³த⁴ ஶிலெய மத்⁴வ முனி
மத்⁴யவாடத³ல்லிட்ட ஸித்³த⁴கெ³ பூஜெகா³கி³ ||30||

ஆ தி³வ்ய ஸ்த²ள கு³ரு வாதி³ராஜகெ³ வஶவாத³
காரண அல்லி ஸாத³ரனிவ ப³ந்த³ ||31||

மேலாகி³ ஹரி ரூப பாலித ஸம்புடதி³
ஶ்ரீலோல வேதே³ஶன்ன காலஞ்ஜ பே³டி³கொ³ண்ட³ ||32||

வாஸவி ஸுத வேத³வ்யாஸனு த³யமாடி³
தா³ஸ யதிய ப⁴க்தி பாஶக்கெ வளகா³த³ ||33||

மத்⁴யவாட மட²த³ பாத³ராயண கு³ரு
ஶுத்த⁴ பூஜெகெ³ மெச்சி ஸோதெ³ மட²க்கெ ப³ந்த³ ||34||

மக³னிகா³க³மத ஜக³வ தந்த³ வேத³
பா⁴க³ மாடி³த³ முவ்வாரீக³ கூடி³த³ பா⁴க்ய ||35||

ப³ந்த³ தே³வர தி³வ்ய வேத³ மங்க³ள வாத்³ய
மது⁴ர பஞ்சாம்ருததி³ந்த³ பூஜிப நித்ய ||36||

நவ ப⁴கூ பே⁴ஜ்யவ நவ மாடி³ஸி
ப்ரதி தி³வஸத³ல்யு வ்யாஸ ஸேவகனிவ ஸுகி² ||37||

ஹிந்த³க்கெ வ்யாஸயோகி³ தந்தி³த்³த³ வ்யாஸ பூஜெ
மத்⁴யத³ மட²த³ல்யு எந்தி³கு நடி³ஸித³ ||38||

மோஸ மாடி³த³னெம்ப³ காஸுபா³ளத³வர
ஏஸு மாதுக³ளன்னு பி³ஸாடு³ ஈ³டா³டி³ தூ³ர ||39||

அவதூ³த ப்ராயனு அவனியலிவனெந்து³
பு⁴வனேஶ ராணிய ப⁴வனக்கெ கரத³ ||40||

ப்ரபு⁴வரன்னு ஏகத்ர உப⁴ய ஸமஸ்தா²ன
ஶுப⁴ வ்யாஸ பூஜெய ஸம்ப்⁴ரம மாடி³ஸித³ ||41||

பூ⁴மி பதியு நோடெ³ காமிஸ்தோம கொட்டு
நேமதி³ வ்யாஸ பூஜெ ஈ முனி மாட³லெந்த³ ||42||

பே³டி³த³ வரத³கெ³ கு³ரு மாடி³த³ பூஜெ கண்டு³
காடி³த ஜனரெல்ல பீ³டா³டி³த³ரு அம்ப³ ஜய ||43||

ப⁴க்தி ஸாரஜ்ஞ ஸூரி திதிய கூடி³ வ்யாஸ
நுதிய மாடி³ நித்ய ஸுத்தி தே³ஹி³ ப³ந்த³ ||44||

வேத³வ்யாஸர மூர்தி ஸாதி⁴ஸி தந்து³
நந்த³ கந்த³ன கூட³ இட்டு நந்த³தி³ பூஜிஸித³ ||45||

வேத³ யஞ்ஜ ஜனயுத வேதா³ந்தி விப்ரனிந்த³
ஸுத்³த⁴ மாடி³ஸி யாக³ யாத³வக³ர்பிஸித³ ||46||

ப்³ருந்தா³வனாக்²யானதி³ந்தோ³க்த சின்ஹதி³ந்த³
ப்³ருந்தா³வனார்யனிவனெந்து³ க்²யாதி பெத்த ||47||

ஹத்திது மட²வெந்து³ தூ³தரு பேளெ கு³ரு
எத்தித³ ஹஸ்த நோடி³ அத்தலாகி³து அக்³னி ||48||

ஹரிய நிர்மால்யவ தூ³ரி பிஸாடவகே³
தூ³ர போத³னு நேத்ர தா³ரிய பிட்டு விஸ்வ ||49||

காடவ மாடு³வர மட்டுமாடு³வ ஸக்தி
கொட்டு இவன கூட³ கோ⁴டாஸ்ய மெரெவனு ||50||

சித்த ஸுத்³தி⁴யுள்ள உத்தம வ்ருத்³த⁴னிகெ இத்தனு
ஸமஸ்தா²ன மத்தரேனந்த³ரேனே ||51||

கு³ப்ததி³ க்ருஷ்ண பூஜெ ஆதகு³ கொட்டு கு³ரு
ப⁴க்தவஸ்யனு யந்த ஸ்துதிய எளகொ³ண்ட³ ||52||

ஸ்ரீ விஷ்ணுதீர்த² வ்ருத்³த⁴ ஸுவம்ஸுத³ல்லி ஜாத
ஸ்ரீவாதி³ராஜ பட்டத³ வகி³த³ஷ்டு யுக்த ||53||

அன்யர ரீதி நோடி³ மன்னிஸி பா³லககெ³
ஸன்யாஸ கொடி³ஸ்யொம்மெ க்ருஷ்ணன பூஜெகி³ட்ட ||54||

ஸாம்ப³வன பெத்தவகெ³ ஒம்ப³த்து நித்ய பூஜெ
ஒப்³ப³னெ மத்து மாடி³ தும்ப³ கீர்தியனைத³ ||55||

யோகி³ பீ⁴மனகட்டெ ரகு⁴வீர முனிகெ³
நிக³மார்த²வ பேளி மக³னந்திட்டுகொ³ண்ட³ ||56||

கோடி துளசி புஷ்ப கோடி நாமவ பேளி
கீடக்கெ ராஜ்யவன்ன கொட்டவக³ர்பிஸித³ ||57||

வேளெகெ³ அன்னபான கேளுவரிகெ³ த⁴ன
பேளுவரிகெ³ ஜ்ஞான கீளாக³தி³த்த பூர்ண ||58||

ஸண்ணவனொப்³ப³ ரூபி அன்னவனுண்டு³ பாபி
மானவில்லெந்து³ கோபி கண்ண களத³ தாபி ||59||

மஶகவில்லத³ந்தெ ஶிஶுவிகெ³ பாலந்தெ
பாஶவு இல்லத³ந்தெ பஶுவிகெ³ ஹுல்லந்தெ ||60||

(க்ரமி கீடாதி யாவ தோஶவு இல்லதந்தெ எந்தர்த².)

தீ³பக்கெ லெக்²க²வில்ல - தூ⁴பக்கெ ஸங்க்²யவில்ல
மெப்பிகெ³ மாடி³த்³தெ³ல்லா ஒப்புவ க்ருஷ்ண ப³ல்ல ||61||

நிஜ கு³ரு ஶ்ரீவாதி³ராஜரிட்ட பவன
ராஜகு³ நவவித⁴ பூஜெ மாடி³த³னேக ||62||

ஈ ஶ்வாஸ தே³வரல்லி விஶ்வாஸி வைராகி³யு
த்³வேஷி மானிஸ கொட்ட விஷ த³க்கிஸிகொ³ண்ட³ ||63||

ஸர்வஞ்ஜ வம்ஶ ஜாத பு⁴வனத³ல்லீகி³த்³த³
கவிக³ளஷ்டரல்லி இவனதி⁴கனாத³ ||64||

ஈ பரி பர்யாயவ பூ⁴பதியந்தெ மாடி³
ஶ்ரீபதி க்ருஷ்ணரிகெ³ தாபஸனர்பிஸித³ ||65||

தந்த்ரஸாரதி³ பேள்வ மந்த்ர யந்த்ரவ கொட்டு
க்ஷேத்ர தீர்த²வ ஸுத்தி பாத்ரர பாலிஸித³ ||66||

தடெ³யு இல்லத³ந்தெ - நடெ³யு ஹம்ஸத³ந்தெ
மடி³யு யோகி³யந்தெ - நுடி³யு ஶுகனந்தெ ||67||

ஹெக³லல்லி தே³வரு - ப³க³லல்லி ப்³ராஹ்மரு
பொக³ளுத ஹரிய மார்க³வ ஸாகி³ஸுவ ||68||

இளிய கொட³தி³ந்த³ - க⁴ளிகெ³ தப்பதொ³ந்து³
மாளிகெ³ மனெயொந்தே³ - கா⁴ளிகெ³ ஹாரிதல்லே ||69||

நதி³கெ³ போகு³வாக³ - மதி³வே தேஜினேரி
ஹாதி³ தடெ³த³ ம்லேஞ்ச² - பீ⁴தி³யொள் பி³த்³த³னல்லே
||70||

புத்ரார்த²ஶ்வொப்³ப³ளிகெ³ யந்த்ரார்த²வில்லவெந்து³ - குரு
தந்த்ரார்த² பேளெ - பதி ஹோத³ - பத்ரார்த² ப³ந்து நோடெ³
||71||

கூஶல்லக தனதி³ந்த³ பா³லக நகி³தா³டெ³
ஜல்லதொ³ள் பி³த்³த³வகே³ ஹல்லு போகி³த்³து³ சித்ர ||72||

த³ண்ட³ களது³ ப³ந்த³ முண்ட³ யதிகெ³ - கு³ரு
த³ண்ட³வ பே³ரெ கொட்டு - மண்ட³ன மாடி³ஸித³ ||73||

கடாஹ தொளெதா³ளு - கு³ரு மட²க்கெ ப³ருவாக³
கோடெய பா³கி³லஷ்டு க⁴ட்டந்த பி³ட்டிதல்லே ||74||

தூ³ரதே³ஶத³ல்லித்³த³ கு³ருவரன மத்து
ப்³யாரெ தே³ஶத³ ராஜதா³ரிலி கண்ட³ரந்தெ ||75||

(ராஜதா³ரி: ராஜமார்க³த³ல்லி எந்த³ர்த².)

நானா புஷ்பத³ல்லொந்து³ தனகா³கி³ பி³த்தெந்து³
மனதி³ நெனவாக³ வனஜ கைய்யல்லித்தெ ||76||

பவனாம்ஶ பூஜித தே³வர மூர்திக³ள
பாவன ஶிஷ்யரிகெ³ ஸேவிஸலெந்து³ கொட்ட ||77||

ப⁴க்த மாடு³வ பூஜெ ஈதனெ மாடு³வாக³
ஆதகெ³ புத்ர புட்டித³ந்தெ பத்ரவு ப³ந்தெ ||78||

(ப⁴க்த = எட³ ப³ல ஸேவெயவனு எந்த³ர்த².)

பும்பா⁴வ இரனொப்³ப³ - இவனம்போ⁴ஜ கரதி³ந்த³
அம்பு³ தளது³கொ³ண்டு ஸம்போ⁴க³ஶாலியாத³ ||79||

ஒப்[3]ப[3]னு வர்ஷ பா[4]ள தும்பி[3]த[3] ம்யாலிவன
அம்பு[3]ஜ பத[3]வன்னு நம்பி[3] ஸபுத்ரனாத[3] ||80||

பூ[4]காந்த ஸேவகன ஏகாந்த ப[4]க்தனொப்[3]ப[3]
ஶ்ரீமதா[3]க்[2]யான நிஜ தத்வ - லோகக்கெ மெப்பிஸித[3] ||81||

முனிய மனோபா[4]வ த[4]னிகனு திளிது[3]
தீ[3]னகெ[3] கன்யா த[4]ன தா[4]ன்யவ பீ[3]ரித[3]னு ||82||

காஶிகெ[3] ஹோகி[3] ஶ்ரீமுஷ்ண வாஸியு க[3]ங்கெ[3] தந்து[3]
மீஸலாகி[3]ட்டு ஸோதா[3] வாஸிவக[3]ர்பிஸித[3] ||83||

ஒது[3] பா[3]ரத[3]வகெ[3] ஸாதி[4]ஸி க்[3]ரந்த[2] பேளி
ஒந்து[3] யாமதி[3] பா[4]ஷ்ய ஒது[3]வ ஶக்தி கொட்ட ||84||

ஜ்ஞானி கொட்டொந்து[3] ரூப்ய மனெயல்லி பூஜிஸெ
மானி தெகெ[3]த[3] ஸால - ஒப்[3]ப த[4]னியு தீரிஸித[3] ||85||

(மானி தெகெ[3]த்[3]த[3] : மன்யாதகி[3]த்[3]த[3] - ஆ மனெயவனிகி[3]த்[3]த[3].)

ஒந்து[3] ஸ்த[2]ளதி ப[3]ந்து[3] மந்தி[3]ர பாலிஸெந்து[3]
ஸுந்த[3]ர ஹனுமன்ன ச[2]ந்த[3]தி[3] ஸ்தா[2]பிஸித[3] ||86||

(மந்தி[3]ர: ஹனுமன)

சோள தே[3]ஶத[3]ல்லொப்[3]ப[3] பா[3]லன்ன தன்ன மட[2]-
தாளின்ன மாடி[3]கொண்டு[3] இளெயொளு மெரத[3] ||87||

கு[3]ருராஜ ஹாடக வர பாத[3] பீட[2]வ
ஶிரத[3]ல்லிட்டெனகெ[3] ஹரி தத்வ பேளித[3] ||88||

ஶுத்தி[4]கரிஸி என்ன ஸுதீ[4] எந்து[3] மாடி[3]த[3]
ஸித்[3]த[4]னுபகாரவ எந்தி[3]கு[3] நா மரியே ||89||

கு[3]லகுருராயன கால தொளத[3] மண்ண
பா[3]ல ஹுண்ணின மேலெ கலிஸி ஸுகி[2]யாத[3] ||90||

கு[3]ரு உண்ட[3] ஶேஷவ நரனொப்[3]ப[3]னுண்டா[3]க[3]
தூ[3]ர ஹோகி[3]து ரோக[3] தூ[3]ருவரிகெ[3] பாப ||91||

அபீனரெல்ல கு³ரு கௌபீனவொக³து³ ஆ
அப்பின்னவளகொ³ண்டு³ ஸுபீனராத³ரக்க ||92||

(அப்பன்னவளகொ³ண்டு : ஒகெ³த³ ஜலவன்னு பானமாடி³.)

மாயிகோ³ மாயுவொப்³ப³ ம்யாயார்த² ப³கெ³ கு³ரு-
ராய பேளித்³து³ கேளி வாத³ ப⁴யதி³ நுதிஸித³ ||93||

ஜயிபனிவனெந்து ந்யாயாதி⁴பதி ஒப்³ப³
மாயி மட²த³ முந்தெ³ தை⁴ர்யதி³ மானிஸித³ ||94||

அன்ய வெங்கட ஸூரி ஆனந்த³ ஸூத்ரத³ல்லி
முனீந்த்³ரன
உபன்யாஸ ஸுநீதி கேளி நிந்த ||95||

த⁴னியொப்³ப³ பே³டலு ஜ்ஞானிய வசனவ
மானிஸி அவ கொட்ட அன்னக்கெ கை பிடி³த³ ||96||

கு³ருராஜரல்லித்³த³ ஹரிதா³ஸ பூ⁴தனு
தூ³ர தே³ஶத³ வார்தெ கு³ரு கருணதி³ பேள்வனந்தே ||97||

கொச்சி பூ⁴பனக⁴வ கொச்சே பே³காத³ ஸேவெ
மெச்சி ஸாம்ராஜ்யவனு பெச்சிஸி த⁴னியாத³ ||98||

மண்ட³லேஶன ஸபெ⁴ மண்டி³ஸி வாத³ தீ⁴ர
லண்ட³ மாயிய கக்ஷி க²ண்டி³ஸி நுதனாத³ ||99||

ராஜமந்த்ரிகெ³ கு³ருராஜனு பா⁴ஷ்ய பேளி
ராஜ மானித கா⁴ளிராஜனல்லித்³து³ ப³ந்த³ ||100||

(கா⁴ளிராஜனெந்து³ கொச்சி ராஜன ஸாமாந்தராஜன
ஹெஸரு)

நித்³ராதி தோ³ஷ தூ³ர ப⁴த்ர ஜனக்கெ தப்த
முத்³ரெயனித்து ஜ்ஞான முத்³ரெய தோரித³னு ||101||

உன்னதவாகி³ தி³வ்ய சின்ன மண்டப மாடி³
க⁴ன்ன தே³வர பூஜெ மனவுப்³பி³ மாடி³த³ ||102||

லெக்கவில்லதே³ க்³ரந்த² லேக²ன மாடி³ கு³ரு
பே³காத³ ஜனரிகெ³ ஸாகெந்தெ³னிஸி கொட்ட ||103||

க்ருஷ்ணாதி³ மந்த்ரக³ள வர்ணக்கெ லக்ஷ ஜப
நிர்ணயதி³ந்த³ மாடி³ முனிக³ள ம்யாலாத³ ||104||

பிஶாச பூ⁴தக³ளு ஶீஶ தா³ஸன்ன கண்டு³
ஆஶெய நீகி³ தூ³ரதே³ஶத³ல்லோடு⁴வது³ ||105||

கலிய தூ³ர மாடி³ ஆலஸ்ய பி³ட்டு கு³ரு
மூல மூவத்தேளு எல்லி கேளலு பேளுவ ||106||

வாதி³ராஜர பஞ்ச ப்³ருந்தா³வன மஹிமெ
ஈ த⁴ரெயொளகி³வ போ³தி⁴ஸி ஹரவித³ ||107||

மத்து ஸுதா⁴தி³ க்³ரந்த² முத்து போணிஸித³ந்தெ
நித்ய பேளுவரல்லி - ஈதகெ³ ஸரி யாரே ||108||

ஒந்து³ க்³ராமத³ல்லித்³து³ ப³ந்த³ ப⁴க்தரிகெ³ல்ல
ஒந்து³ தர வார்த² பாட² போ³தா⁴ப்³தி³ ஸாகி³ஸித³ ||109||

ஈ ரீதி தன்ன பாத³ ஸேரித³ ஜனரிகெ³
மூரொந்து³ புருஷார்த² பீ³ரித³ ப³ஹுகால ||110||

வராஹதீர்த²னெம்ப³ எரட³ணே ஶீபாத³னு
பர ஸித்தி⁴யனைத³லு - ஹரி ஸங்கல்பவெந்த³ ||111||

ஈடு³ இல்லதெ³ பூ⁴மிகொ³டெ³யகெ³ பூஜெய
பி³ட³தெ³ மாடி³ புண்ய பட³த³ வயோவ்ருத்³த³ ||112||

(ஈடு : (த்³விதீய) அன்ய ஸஹாய எந்த³ர்த². ஈடு³
இல்லதெ³ ஏகாகியாகி³, அத²வா ஸமரில்லதெ³
அஸத்³ருஶவாகி³ எந்த³ர்த².)
ஸட³க³ர பூஜெய கு³ரு - நடெ³ஸல்லவெந்த³ந்த³
மூட⁴னு புரோபா⁴கி³ கடெ³கெ³ தோ³ஷபா⁴கி³ ||113||

எல்லி பே³டி³த³ரல்லி - நில்லுவ த³யாநிதி⁴ - க்ஷுல்லக-
ரல்லி - காலு க⁴ளிகே³ - நில்லவொல்ல ||114||

எல்லா தே³ஶத³ல்லித்³த³ ப³ல்லித³ ஶிஷ்யரெல்ல
ஸல்லோக கு³ரு வாக்ய ஸல்லிஸி பா³ளுவரு ||115||

கந்துபிதன நித்ய ப்⁴ருத்ய ராஜர க்ருபெ-
யித்து ஈ யதியல்லி எந்திஹதோ³ திளியே ||116||

(எந்திஹதோ³ : எஷ்டிஹதோ³ எந்த³ர்த².)

தூ³ரத³ல்லிரெ யதி பெ³ரகா³கொ³ம்மெ ஸோதா³-
புரக்கெ ப³ந்து³ கு³ரு சரண க³தியெந்த³ ||117||

(நிம்ம சரணவே நனகெ³ க³தி, முந்தே³னு மாட³லி? எந்து³
கேளித³ரு எந்த³ர்த³.)

ஶ்ரீ ராஜராஞ்ஜெயன்னு ஶிரத³ல்லி த⁴ரிஸி
கு³ரு உடு³பியல்லி ஸ்தி²ரவாகி³ நிந்தனு ||118||

புத்ரிகெ³ யதிவர ஈதகெ³ ப⁴க்தனாகி³
மத்து ஸேவெய மாடி³ கீர்தி பெச்சிஸிகொ³ண்ட³ ||119||

ஆ வேளெ ரகு⁴வீர பா⁴வஞ்ஜ யதி ப³ந்து³
பாவன கு³ரு பாத³ ஸேவகனாத³ நோடு³ ||120||

மஜ்ஜன மாடி³ ஹொத்து ஹெஜ்ஜெய நோடி³ தே³வ
பூஜெ நடி³ஸி த்³விஜ போ⁴ஜனவாக³லெந்த³ ||121||

ஜனரு மொரெயிடெ³ ஜ்ஞானி பீ⁴மனகட்டெ
முனிய நோடி³ முந்தெ³ த⁴ன்யராக³லி எந்த³ ||122||

காஷாய த³ண்ட³த⁴ர ஆஷாட³ த³ர்ஶத³ல்லி
தோ³ஷிகெ³ மரெயாத³ தா³ஸகெ³ தோருவனு ||123||

சின்ன மூரணெ யதி உன்னத தே³வபூஜெ ஆ-
தி³ன்னத³லொப்புகொண்ட³ க⁴ன்ன ராஜர சித்த ||124||

அனுதாப பூர்வக முனி விஶ்வாதீ⁴ஶேந்த்³ர - ஆக³
ஜனக்கெ அன்ன வஸ்த்ர த⁴னவ ஸுரிஸித³ ||125||

ஈ ஸுத்³தி³ கேளி கு³ரு ஶிஷ்யரு அல்லிக³ல்லி
வஸனான்ன த³க்ஷிணெ தா³ஸரிகி³த்தரம்ம ||126||

வாகீ³ஶதீர்த²ரித்³த³ பா⁴க³தி³ க்ருஷ்ணஸங்கீ³
யோகி³ ப்³ருந்தா³வனதி³ ஈக ஸேவெயகொ³ம்ப³ ||127||

கனஸினல்லாத³ரு என்ன கண்ணிகெ³ கு³ரு
அனுதி³ன தோரலி என்னுத பே³டி³கொம்பெ³ ||128||

ஆடித்³து³ வேத³மந்த்ர - கு³ரு - மாடித்³து³ புண்யகார்ய
நோடி³த்³து³ த³யா வ்ருஷ்டி - நீடித்³து³ வரக³ளு ||129||

பாண்டு³ரங்க³ன்ன ஸதா³ கூடி³த்³த³ பாண்ட³வரன்ன
புண்ட³ரு கண்ட³ மாதனாட³லேனாகி³தம்ம ||130||

இன்னிந்த கு³ருகெ³ணெ இன்னொப்³ப³ரனு காணெ
இன்னிந்தவரனாணெ இன்னாரு திளி ஜாணெ ||131||

எஷ்டோ மஹிமெயீத குண்டவாத³ரு திளி
து³ஷ்டு பேளுவுத³க்கெ துஷ்டரு பா⁴ளவஷ்டெ ||132||

இல்லி பேளித³ கதெ² அல்லல்லிருவ ஜன-
ரெல்லரு ப³ல்லரிது³ ஸுள்ளல்ல நிஜ தங்கி³ ||133||

நித்யத³ல்லி பத³வ ப்ராத காலத³லெத்³து³
சித்தவிட்டு படி²ஸெ சித்தஜனய்ய காவ ||134||

ஈதகெ பாத³ஸேவெ ஸேதுமாத⁴வனெம்ப³ ப⁴க்த
மாடி³த³ க்ருதி கூடிதியொள் மெரெயலி ||135||

ஸுஜனரிகோ³ஸுக³ விஜய ஹயக்³ரீவ ஈ ஜக³த்கு³ரு
கு³ணராஜீய நுடி³ஸித³ ||136||

||இதி ஶ்ரீ குருலீலா விலாஸ ஸம்பூர்ணம் ||

ஶ்ரீ ஸேதுமாதவாசார்ய அந்தர்கத விஶ்வப்ரிய தீர்த குர்வந்தர்கத
வாதிராஜாந்தர்கத மத்வேஶார்பணமஸ்து

•••••

ஹரி ஸர்வோத்தம ! வாயு ஜீவோத்தம !!

ஸ்ரீ கு³ருலீலா விலாஸ

**(உடுப்பி ஸோதெ மடத ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார்
ஸ்ரீவிஶ்வப்ரிய தீர்த்தர சரிதாம்ருதம்)**

**ரசனெ: :
ஸ்ரீ எல்லத்தூர் ஸேதுமாத⁴வாசாரார்ய ஸூரி
(அங்கித: விஜய ஹயக்³ரீவ)**

கேளே இவன லீலெ பா³லே
(தீ³ர்க⁴ க்ருதி)

**ராகம்: பூரி கல்யாணி தாளம் : ஆதி
(லக்ஷ்மி ஷோபானெ மெட்டிலும் பாடலாம்)**

கேளே இவன லீலெ - பா³லே பேளுவனல்லெ ||ப||

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் லீலைகளை கேட்பாயாக. ஹே பெண்ணே, நான் அதை சொல்கிறேன்.

**ஸல்லோக கு³ருலீலெ - கெல்லாவு கேளி ப³ல்லெ
எல்லாவு வரலோலெ - ப³ல்லார பூர்வ எலெ ||அ.ப||**

மிகச் சிறந்தவரான குருவின் லீலையை கேட்பவர்கள் அனைத்தையும் வென்றவர்கள் ஆகின்றனர், இதை அறிவாயாக. அவரைப் பற்றியதான அனைத்தும் சிறந்ததே ஆகும். அத்தகைய மகானின் வரலாற்றினை கேட்பாயாக.

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் வாழ்க்கை முழுவதும் அவரது மகிமைகளால் நிறைந்திருக்கின்றன. பக்தியுடனும், ஸ்ரத்தையுடனும் இதை நீ கேட்பாயாக. இத்தகைய குருகளின் மகிமை பொருந்திய வாழ்க்கைச் சரிதத்தை யாரால்தான் முழுவதுமாக வர்ணிக்க முடியும்?. யாராலும் முடியாது.

வாதி³ராஜர ப்ரியா - நந்த³ தீர்த²ர ஶுத்³த⁴
ஹ்ருத³ய³ல்லித்³த³ ஶ்ரீ - ஸத³னகெ³ வந்தி³பெ ||1||

ஸ்ரீவாதிராஜருக்கு பிடித்தமானவரான, ஸ்ரீமதானந்த தீர்த்தரின் பவித்ரமான ஹ்ருதய அந்தர்யாமியான ஸ்ரீமன் நாராயணனை வணங்கிவிட்டு, இந்த க்ருதியை தொடங்குகிறேன்.

தெளலவ மண்ட³லதி³ குலத³ மஹீஸுர - நிலயதி³ ஜனிஸி
காலதி³ த்³விஜனாத³ ||2||

துளு பேசும் பகுதியைச் சேர்ந்த ஒரு ப்ராஹ்மணரின் இல்லத்தில் பிறந்து, தக்க காலத்தில் உபனயனம் முடிந்து ப்ரம்ஹசாரி ஆனார்.

ஸ்ரீகிருஷ்ணாசார்ய, ஸ்ரீஹனுமந்தராய, ஸ்ரீவிட்டலாசார்ய என்னும் மூன்று சகோதரர்கள் இருந்த குடும்பத்தில், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், ஸ்ரீகிருஷ்ணாசார்யருக்கு பிறந்தார். இவரது இயற்பெயர் 'ஸ்ரீனிவாஸ'. இந்த சகோதரர்கள், அப்போதைய ஸோதே மடத்தின் பீடாதிபதியாக இருந்த ஸ்ரீவிஶ்வாதீஶ்வர தீர்த்தரின் பூர்வாசிரம தங்கையின் மக்கள் ஆவர்.

வேத³வ விப்ரனல்லி ஓதி³த³ ப்³ரஹ்மசாரி
ஶுத்³த⁴ காவ்யவனோதி³ - ஸுதெ⁴யாத³ வினோதி³ ||3||

சிறந்த அறிஞரான தன் தந்தையிடம் வேதங்களை ஓதிய அந்த ப்ரஹ்மசாரி, பவித்ரமான ஸர்வமூல க்ரந்தங்களையும் தொடர்ந்து படித்து அறிஞர் ஆனார்.

விஶ்வேஶ பூஜெகா³கி³ விஶ்வேஶ தீர்த²ரிந்த³
விஶ்வப்ரியனு எந்து - விஶ்வாஸி யதியாத³ ||4||

விஶ்வேஶனான ஸ்ரீமன் நாராயணனின் பூஜைக்காக, ஸ்ரீவிஶ்வேஶ தீர்த்தரால், விஶ்வப்ரியர் என்று பெயரிடப்பட்டு, அனைவராலும் மதிக்கத்தக்க யதி ஆனார்.

(சிறுவனான ஸ்ரீனிவாஸன், சிறு வயதிலேயே அபாரமான வைராக்யத்துடன் இருந்ததைப் பார்த்து, இவர் யதி ஆஸ்ரமத்திற்கு பொருத்தமானவராக இருப்பார் என்று ஸ்ரீவிஶ்வேஶ தீர்த்தர் நினைத்தார். ஸ்ரீவிஶ்வேஶ தீர்த்தர், ஸ்ரீவிஶ்வாதீஶ்வர தீர்த்தருக்கு அடுத்து பீடத்துக்கு வந்தவரும்,

பூர்வாசிரமத்தில் ஸ்ரீனிவாஸனின் சித்தப்பாவான ஸ்ரீவிட்டலாசார்யரே ஆவார்).

ஶிரத³ல்லி நிர்மால்ய கொரளல்லி அக்ஷமாலெ
உத³ரதி³ பத்³மக³ந்த⁴ - கரதி³ ஜப ஸர ||5||

தலையில் நிர்மால்ய தீர்த்தம், கழுத்தில் அக்ஷமாலை, வயிற்றில் நறுமணம் மிக்க சந்தனம் மற்றும் கையில் ஜப மாலை (ஆகியவற்றுடன்)

கடிஸூத்ர லங்கோ³டி - ஶாடி ஸூத³ண்ட³ ஜ(z)ரி
வத்³தி³கெ³ தா த⁴ரிஸி - படு ஹம்ஸ தோரித³ ||6||

வயிற்றைச் சுற்றி கடிஸூத்ர (அரைஞாண் கயிறு), லங்கோடு, காஷாய வஸ்த்ரம், தண்டம், கமண்டலு ஆகியவற்றை தான் ஏந்தி, வயதில் சிறியவரான அந்த யதி தோன்றினார் (காட்சியளித்தார்).

தி³னகரனோபாதி மணெயல்லி பொளெவ - முத்³து³ –
சின்ன யதிய கண்டு³ - ஜன பெரகா³கி³து ||7||

உதயஸூரியனைப் போல ஒளியுடன், அழகாக நின்ற இந்த சிறிய வயது யதியைக் கண்டு, மக்கள் அனைவரும் வியந்தனர்.

எல்லரு இவர பாத³ ஜலஜவ தொளெது³ - ஆ
ஜலவ ஶிரத³ல்லி தளது³கொண்ட³ராக³ ||8||

அனைவரும் இவருடைய பாத கமலங்களை கழுவி (பாதபூஜை செய்து), அந்த பாதோதகத்தை தங்களுடைய தலையில் தெளித்துக் கொண்டனர்.

கு³ருக³ளிட்ட ஆஞ்ஜெய - ஶிரபா³கி³ த⁴ரிஸி
வர கு³ரு ஸேவெய பூரைஸித³ரனுதி³ன ||9||

தன் குரு ஸ்ரீவிஶ்வேஶ தீர்த்தர், தனக்கு இட்ட ஆணையை தலைவணங்கி ஏற்றுக் கொண்டு, ஸ்ரீஹரி குரு ஸேவையை தினம்தோறும் தவறாமல் செய்து வந்தார்.

வ்ருத்³த³ பரமகு³ரு - ஶூத்³த⁴ ஸன்னிதி⁴யல்லி
இத்³து³ கெலவு கால - ஒதி³த³ மத்⁴வ ஶாஸ்த்ர ||10||

வயதான தன்னுடைய பரமகுருவின் (ஸ்ரீவிஶ்வாதீஶ்வர தீர்த்தர்) பவித்ரமான ஸன்னிதியில் சில காலங்கள் இருந்து, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், மத்வ சாஸ்த்ரங்களை கற்றுத் தேர்ந்தார்.

ப⁴க்தி விரக்தியல்லி - ஈதகெ³ ஸம பா³ல
யதியு இல்லவெந்து³ - கீர்திய பெ³ளகி³த³³ ||11||

பக்தி விரக்திகளில், இந்த சிறிய யதிக்கு சமமான வேறு சிறிய வயது யதியே யாரும் இல்லை என்று அனைவரும் வியக்கும் வண்ணம் தன் புகழினை வளர்த்தார்.

அனஶன நேமதி³ மௌனியாகி³த்³து³ மத்து
அன்னவ ஸ்வல்பவ உண்டு³ - ஜனக்கெ புண்யவித்த ||12||

சில காலங்கள் கடும் உபவாசத்தில் இருந்து, நியமமாக மௌன விரதம் கொண்டு, பின்னர் சில காலங்கள் சிறிதளவே உண்டு, மக்கள் அனைவருக்கும் புண்ணியத்தை கொடுத்தார்.

வ்ருத்³த³ர வஶனாகி³ - ஸித்³த⁴னு ஒந்து³ பா⁴ரி
முத்³து³ க்ருஷ்ண பாத³ - மொத³லு பூஜிஸித³ ||13||

இவரது முதல் பர்யாய பூஜையின் விவரங்கள் இங்கு சொல்லப்படுகின்றன. மூத்த யதிகளான / பரமகுருவான ஸ்ரீவிஶ்வாதீஶ்வர தீர்த்தரின் ஸன்னிதியில், அவரது அனுக்ரஹத்துடன், இந்த சிறிய யதியானவர் ஒரு முறை, முத்து கிருஷ்ணனின் பாதங்களை முதலில் பூஜித்தார்.

எத்³து³ ஸோதெ³கெ³ போகி³ - ராஜர வ்ருந்தா³வனத³ முந்தெ³
ஓதி³த³கி³வகெ³ அர்த² ஶப்³த³வு கேளிதந்தெ ||14||

பிறகு அங்கிருந்து ஸோதே சென்று, ஸ்ரீவாதிராஜரின் ப்ருந்தாவனத்திற்கு முன் அமர்ந்து, சாஸ்திரங்களை படித்தவருக்கு, (ராஜரின் ப்ருந்தாவனத்திலிருந்து) அந்த சாஸ்த்ர அர்த்தங்கள் கேட்டனவாம்.

எப்போதெல்லாம் சிறிய யதிகளுக்கு சாஸ்த்ர ப்ரமேயங்களில் ஏதேனும் சந்தேகம் வருகிறதோ, அப்போதெல்லாம் ஸ்ரீவாதிராஜர், மூல ப்ருந்தாவனத்திலிருந்து இவருக்கு மட்டுமே கேட்குமாறு பேசி, அந்த சந்தேகங்களை தீர்த்து வைப்பாராம். இது ஒரு வகையில் இவருடைய பூர்வ ஜென்மத்தை

குறிப்பதாகவும் இருந்தது. அப்போது, ஸ்ரீவாதிராஜர் இவருடைய கனவில் வந்து, 2258 ஸ்லோகங்களைக் கொண்ட ஸ்வப்ன வ்ருந்தாவனாக்யான க்ரந்தத்தை சொல்லிக் கொடுத்திருந்தார் என்பதை அறிகிறோம்.

தே³ஶ தே³ஶதி³ ப³ந்த⁴ தா³ஸ ஜனரிகெ³ல்ல
ஸ்ரீஶன மஹிமோபதே³ஶவ மாடி³த³³னு ||15||

நாட்டின் பற்பல பாகங்களிலிருந்து திரண்டு வந்த தாஸ மக்களுக்கெல்லாம், ஸ்ரீஹரியின் அபாரமான மகிமைகளை, உபதேச வடிவில் கூறி அருளினார்.

(மிகச் சிறிய அளவிலேயே உணவை உட்கொண்டாலும், யதிகள் எவ்வித சோர்வு இன்றியும், மிகவும் ஆர்வமுடனும் தன்னைத் தேடி வந்த ஸிஷ்யர்களுக்கு அனைத்து ஸர்வமூல க்ரந்தங்களையும், மத்வ ஸித்தாந்தத்தின் சிறப்புகளைப் பற்றியும் உபதேசம் செய்து கொண்டிருந்தார்).

மூருலோகவனாள்வ ஸுரேந்த்³ரனந்தெ தபோ
வரவ மாடி³ முனி தீ⁴ரனெந்தெ³னிஸித³ ||16||

மூன்று உலகங்களையும் ஆளும் ஸுரேந்த்ரனை (இந்த்ரனைப்) போல, மிகச் சிறந்ததான தவ சக்தியைப் பெற்று, முனிவர்களில் சிறந்தவன் என்று அழைத்துக் கொண்டார்.

(தேவர்களின் தலைவனான இந்த்ரன், கடும் தவம் புரிந்து, 100 அஸ்வமேத யாகங்களையும் செய்து, அந்த இந்த்ர பதவியை பெற்றிருக்கிறார் என்பதை புராணங்களிலிருந்து அறிகிறோம். அதைப் போலவே, ஸ்ரீவாதிராஜரின் ஆணைக்கேற்ப, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரும் (அடுத்த கல்பத்தில், ஸ்ரீவாதிராஜர் ஸ்ரீமத்வராக ஆகும்போது, இவரே இந்த்ர பதவிக்கு வருகிறார்) தனது கடும் மனவலிமையால், கடும் தவத்தினை செய்து வந்தார்).

த⁴வள க³ங்கா³ தீர த்ரிவிக்ரமனுத்ஸவ அவப்⁴ருத²
நடெ³ஸி
தி³விஜ னந்தொ³ப்பித³ ||17||

ஸோதே மடத்தில் உள்ள தவள கங்கையின் தீரத்தில் இருக்கும் ஸ்ரீத்ரிவிக்ரம ஸ்வாமியின் உத்ஸவத்தை மிகச் சிறப்பாக நடத்தி, தேவதை என்று புகழப்பட்டு திகழ்ந்தார்.

ஸ்ரீவாதிராஜரின் ஆணைப்படி, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், ஸ்ரீத்ரிவிக்ரம ஸ்வாமிக்கு செய்த ரதோத்ஸ்வமானது, இந்த்ர தேவரே பூலோகத்திற்கு இறங்கி வந்து செய்த விழாவைப் போல அபாரமாக இருந்தது. ஸோதேயில் ஸ்ரீத்ரிவிக்ரம ஸ்வாமியின் ரதோத்ஸவமானது, ஆண்டு தோறும் பால்குண பௌர்ணமியன்று, அதாவது, ஸ்ரீவாதிராஜரின் ஆராதனைக்கு மூன்று நாட்கள் முன்னர் இன்றளவும் நடந்து வருகிறது.

கு³ரு வாதி³ராஜர வரதி³ வஸதி³ பூ⁴ஸுரரிக³ன்ன வஸ்த்ர
ஸுரிஸித னுதா³ர ||18||

குருவான ஸ்ரீவாதிராஜரின் ஆராதனையை, அவருடைய வரத்தினால், மிகச் சிறப்பாக நடத்தினார். ஸோதே க்ஷேத்திரத்திற்கு வந்த பக்த ப்ராஹ்மணர்களுக்கு, அன்ன வஸ்த்ரங்களை அள்ளி வழங்கினார்.

(இவ்வாறு இவர் பக்தர்களுக்கு அள்ளி வழங்கிய செயல் எப்படி இருந்தது என்றால், வானில் கரும் மேகங்கள் சூழ்ந்து, தன்னிடம் இருந்த அனைத்து தண்ணீரையும் ஒரேயடியாக பொழிந்ததைப் போல இருந்தது).

நித்யத³ல்லன்னதா³ன மத்து நடெ³வுத³க்கெ
ஸுத்து பூ⁴மிய
வ்ருத்³தி³ ஈத மாடி³த³ த⁴ன்ய ||19||

நித்யத்தில் அந்த க்ஷேத்திரத்தில் அன்னதானம் நடக்க வேண்டும் என்பதற்காக மிகச் சிறந்த ஏற்பாடுகளை செய்திருந்தார், இந்த மஹாமுனிவர். இதைப் போன்றதான ஒரு அன்னதான சேவை, இந்த பூமியில் எங்கு சுற்றி வந்தாலும், எங்கும் காணக்கிடைக்காத ஒரு காட்சியாக இருந்தது.

பூ⁴மிய ஸீமெ தப்பி காமிஸி ப³ந்த³வர வர்மாஸி சர் -
மதா⁴ரி ஸ்தோம தோரோடி³ஸித³ ||20||

ஸ்ரீஸோதே மடத்திற்கு சொந்தமான நிலங்களிலிருந்து / இடங்களிலிருந்து கணிசமான தொகை ஒன்று நிரந்தரமாக ஸ்ரீமடத்திற்கு வந்து கொண்டிருந்தது. ஆனால், சில கெட்டவர்களின் இடையூறினால் இவ்வாறான சில நிலங்கள் ஆக்ரமிக்கப்பட்டன. ஆனால், பூதராஜரின் மகிமையினால், அவர்கள் அனைவரும் உடனடியாக திருந்தி, அந்த இடங்களை ஸ்ரீமடத்திற்கே திருப்பிக் கொடுத்தனர்.

(அத்தகைய இடங்களில் ஸ்ரீபூதராஜரால் அனுப்பப்பட்ட பல்வேறு மர்மமான காவலாளிகள் காவல் காத்து நிற்பதை பார்த்ததாக அவர்கள் கூறினர். அந்த பயத்தாலேயே அவர்கள் ஓடோடி தப்பிச் செல்வதாகவும் கூறினர். இதுவே ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் தீக்ஷைக்கு ஒரு சான்றாக இருக்கிறது).

பர நிக்[3]ரஹத[3]ல்லி கு[3]ருராஜரிட்ட ஸ்ரீ நாராயணார்ய
பூ[4]த நிருதவிஹனில்லி ||21||

ஆகவே, ஸ்ரீவாதிராஜரின் ஆணைப்படி, இந்த சிறிய யதிகளின் அந்தர்யாமியாக இருந்து, ஸ்ரீஸோதே மடத்தின் நலனுக்காக ஸ்ரீபூதராஜரே இப்படிப்பட்ட செயல்களை செய்தார் என்று சொல்லப்பட்டது.

து[3]ருள மாயிபி[3]க்ஷு ப[3]ரத[3] பூர்வபக்ஷ ஸரிநோடி[3]
ஸ்வபக்ஷ
ப[3]ரஸிதனீ த[3]க்ஷ ||22||

கெட்டவர்களான மாயாவாத யதி (ஜீவேஸ்வர ஐக்யத்தை சொல்லும் மதம்) ஒருவர் தன் மதத்தின் சார்பாக ஒரு பூர்வபக்ஷத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். ஸ்ரீமதாசார்யாரின் தத்வ வாதத்தில் (ஜீவேஸ்வர பேதத்தை சொல்லும் மதம்) மிகச் சிறந்த பாண்டித்யத்தைப் பெற்றவரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், அந்த பூர்வபக்ஷத்தைப் படித்து, அதனை கண்டிக்கும் விதமாக தன் ஸித்தாந்தத்தை எழுதி, மாயாவாத மதத்தின் குறைகளை மிகவும் அற்புதமாக விளக்கிக் காட்டினார்.

பஞ்ச ப்[3]ருந்தா[3]வனக்கெ கு[3]ருவந்த[3]ன மாடு[3]வாக[3]
ஒந்த்[3]-ஹிடி[3] மந்த்ராக்ஷதெ ப[3]ந்து[3] ஶிரதி[3] பி[3]த்தே ||23||

உடுப்பிக்கு பர்யாய பூஜை செய்வதற்காக செல்ல வேண்டும் என்று, அதற்கான ஸ்ரீராஜரின் அனுமதியைப் பெற, அவரின் பஞ்ச ப்ருந்தாவனத்திற்கு குருவந்தனை செய்யும்போது, அங்கிருந்து ஒரு பிடி மந்த்ராக்ஷதை வந்து இவருடைய தலையில் விழுந்தது. ஸ்ரீராஜரின் ஆசிர்வாதம் இவ்வாறாக ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாருக்கு கிடைத்தது.

கு[3]ருராஜர கர ஸரஸிஜ ஸஞ்ஜாத
வரத[3] வேத[3]வேத்[3]ய சரணக்கெரகி[3]த[3] ||24||

ஸ்ரீராஜரின் ஆசிர்வாதத்தைப் பெற்ற பின், இவர் அந்த குருராஜரின் கரகமல ஸஞ்ஜாதரான ஸ்ரீவேதவேத்ய தீர்த்தரின் (கவ்ய ருஜு & பாவி லாதவ்ய) ப்ருந்தாவனத்தையும் விழுந்து வணங்கி ஆசிகளைப் பெற்றார். இந்த ப்ருந்தாவனம், ஸ்ரீராஜருக்கு வலது புறத்தில் இருக்கிறது.

வந்தி³ஸி கு³ருத்³வய பாத³வ ஸித்³த³னாகி³ ப³ந்த³னு
உடு³பிகெ யாத³வ பூஜெகா³கி³ ||25||

இவ்வாறாக ஸ்ரீவாதிராஜர் மற்றும் ஸ்ரீவேதவேத்யர் என இரு ருஜு தேவதைகளின் ஆசிகளையும் பெற்று, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் உடுப்பிக்கு பர்யாய பூஜைக்காக வந்தார்.

பட்ட ஸிம்ஹாஸனதி³ இட்டு ராஜர பாத³பீட²
ப⁴ரதனந்தெ
தி³ட்ட ஸேவகனாத³ ||26||

உடுப்பியில், பர்யாயத்திற்காக ஸர்வஜ்ஞ பீடத்தில் தான் அமர்ந்தபோது, அதைப் போலவே இன்னொரு பீடத்தை வைத்து, அதனை ஸ்ரீராஜருக்கு சமர்ப்பித்தார். அதில் ஸ்ரீராஜரின் இரு பாதுகைகளை வைத்து, தான் அதனுடைய மெச்சிய சேவகன், பக்தன் ஆனார். இது எப்படி இருந்தது என்றால், பரதன் நந்திக்ராமத்தில் இருந்து, ஸ்ரீராமனின் பாதுகைகளை வைத்துக் கொண்டு, அதன் மூலம் 14 ஆண்டுகள் அயோத்தியை ஆண்டது போலவே இருந்தது.

கோல ஸ்ரீ வாஜிமுக² பா³லகிருஷ்ணர பூஜெ
கால தப்பதெ³ மாடி³ பா³ளித³ மஹாராய ||27||

உடுப்பியில் இருந்தபோது, ஸ்ரீபாலகிருஷ்ணனின் பூஜையுடன், ஸ்ரீபூவராஹ ஸ்வாமி மற்றும் ஸ்ரீஹயக்ரீவ தேவர் ஆகியோரின் பூஜையையும் (ஸ்ரீமத்வர் / ஸ்ரீவாதிராஜர் செய்து கொடுத்திருந்த விதிகளின்படி) காலம் தவறாமல் செய்து, உடுப்பியில் வாழ்ந்தார் (திகழ்ந்தார்) மஹாராயரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார்.

வீக்ஷிஸி ராஜ கொட்ட லக்ஷ த்³ரவ்யவ கு³ரு
லக்ஷ்ய மாட³தெ³ த⁴ர்ம பக்ஷிக்கெ ஸுரெபி³ட்டனு ||28||

ஒரு முறை பர்யாய பூஜையின்போது, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் ஸம்ப்ரமமான பூஜையைக் கண்டு, அவர் மேல் பக்தி கொண்டு, காணிக்கையாக ஒரு லக்ஷ

ரூபாய்களை அவரிடம் கொடுத்தான். அனைத்தையும் துறந்தவரான, மஹா விரக்தரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், அந்த தொகையை சிறிது கூட லக்ஷ்யம் செய்யாமல், அப்படியே அங்கிருந்த பண்டிதர்களுக்கும், தர்மத்திற்காகவும் செலவு செய்வதற்காக கொடுத்து விட்டார். மகாபாரதத்தில் ராஜஸூய யாகத்தின் சமயத்தில், யுதிஷ்டிரன் செய்ததைப் போலவே இருந்தது இந்தச் செயல்.

ஸரள பு⁴வனேந்த்³ர கு³ரு மொத³லெல்லரு
த⁴ரேயொளிவகெ³ணெ யாரில்லவெந்த³ராக³ ||29||

அவரது ஸமகாலத்தவரான ஸ்ரீபுவனேந்த்ர தீர்த்தர், (ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமி மடம், 1785-1799, ராஜோளி), மற்றும் பலரும் (ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் இந்த அற்புத செயல்களைப் பார்த்து வியந்து) இந்த பூமியில் இவருக்கு இணை என்று யாருமே இல்லை என்றனர்.

ப³த³ரீவாஸ கொட்ட ஶுத்³த⁴ ஶிலெய மத்⁴வ முனி
மத்⁴யவாடத³ல்லிட்ட ஸித்³த⁴கெ³ பூஜெகா³கி³ ||30||

ஸ்ரீமதாசார்யார், ஊர்த்வ பத்ரியில் பகவான் ஸ்ரீமன் நாராயணனை தரிசித்தபோது, அவர் இவருக்கு எட்டு வ்யாஸமுஷ்டி சாலக்ராமங்களை அருளியிருந்தார். உடுப்பிக்கு திரும்பியதும், ஸ்ரீமதாசார்யார் அதில் ஒன்றை, அஷ்ட மடத்து யதிகளும் பூஜிக்கும் வண்ணம், மத்யவாட மடத்தில் ப்ரதிஷ்டை செய்தார்.

மத்யவாட க்ராமம் தெற்கு கனரா மாவடத்தில் உள்ளது. ஸ்ரீமத்வர், உடுப்பியிலிருந்து குக்கே செல்லும் வழியில், இங்கு வந்து தன்னுடைய ஆன்ஹிகங்களை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பதை அறிகிறோம். அப்போது வ்யாஸ முஷ்டி சிலையை அவர் இங்கு ப்ரதிஷ்டை செய்தார்.

ஆ தி³வ்ய ஸ்த²ள கு³ரு வாதி³ராஜகெ³ வஶவாத³
காரண அல்லி ஸாத³ரனிவ ப³ந்த³ ||31||

அத்தகைய திவ்ய ஸ்தளமான மத்யவாட மடம், குரு ஸ்ரீவாதிராஜரின் மடத்தின் வசத்தில் இருந்ததால், குருகளின் மேல் அபாரமான பக்தியைக் கொண்டவரான இவர் (ஸ்ரீப்ருந்தாவனாசார்யார்) அங்கு வந்தார்.

மேலாகி³ ஹரி ரூப பாலித ஸம்புடதி³
ஸ்ரீலோல வேதே³ஶன்ன காலஞ்ஜ பே³டி³கொ³ண்ட³ ||32||

(வ்யாஸ முஷ்டிகள் வைக்கப்பட்டிருந்த) அந்த ஸம்புடத்தின் மேல், ஸ்ரீஹரியின் ரூபம் சின்னமாக, பாதுகாப்பிற்காக வடிக்கப்பட்டிருந்தது. லக்ஷ்மி லோலனான, வேதங்களில் புகழப்பட்டிருக்கும் தலைவனான ஸ்ரீமன் நாராயணனை (ஸ்ரீப்ருந்தாவனாசார்யார்) தொடர்ச்சியாக அங்கு வேண்டிக் கொண்டார்.

வாஸவி ஸுத வேத³வ்யாஸனு த³யமாடி³
தா³ஸ யதிய ப⁴க்தி பாஶக்கெ வளகா³த³³ ||33||

வாஸவியின் (ஸத்யவதியின்) மகனான பகவான் ஸ்ரீவேதவ்யாஸன் மிகவும் கருணை கொண்டான். தன்னுடைய தாஸனான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் பக்தி பாஶத்தில் தான் கட்டுப்பட்டான்.

மத்⁴யவாட மட²த³ பாத³ராயண கு³ரு
ஶுத்த⁴ பூஜெகெ³ மெச்சி ஸோதெ³ மட²க்கெ ப³ந்த³ ||34||

மத்யவாட மடத்தில் இருந்த வ்யாஸ முஷ்டியில் அந்தர்யாமியாக இருந்த அம்ப்ரிணீபதியான ஸ்ரீவேதவ்யாஸ பகவான், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் பூஜைக்கு மெச்சி, அவருடன் ஸோதெ மடத்திற்கு வந்தான். அதாவது, அந்த வ்யாஸ முஷ்டியை ஒரு சிறிய ஸம்புடத்தில் வைத்து, அதனை இன்னொரு பெரிய ஸம்புடத்தில் வைத்து, ஸோதே மடத்தில் வைக்கப்பட்டிருந்தது.

மக³னிகா³க³மத ஜக³வ தந்த³ வேத³
பா⁴க³ மாடி³த³ முவ்வாரீக³ கூடி³த³ பா⁴க்ய ||35||

ஸ்ரீவேதவ்யாஸர் தன் மகனான ப்ரஹ்ம தேவருக்கு, அசுரர்களிடமிருந்து ஆகமங்களை மீட்டுத் தந்தார். பின்னர், வேதங்களை ரிக், யஜுர், ஸாம, அதர்வண என்று நான்கு பாகங்களாக பிரித்துக் கொடுத்தார். முவ்வாரு = 3*6 = 18 புராணங்களை இயற்றிக் கொடுத்தார். இவ்வாறாக, அனைவருக்கும் மிகப்பெரிய பாக்கியத்தை அருளினார்.

ப³ந்த³ தே³வர தி³வ்ய வேத³ மங்க³ள வாத்³ய
மது⁴ர பஞ்சாம்ருததி³ந்த³ பூஜிப நித்ய ||36||

இவ்வாறு மத்யவாடத்திலிருந்து வந்த ஸ்ரீவேதவ்யாஸ பகவானை, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், திவ்ய வேத மந்த்ரங்கள் ஒலிக்க, மங்கள வாத்யங்கள் முழங்க வரவேற்று, இனிமையான பஞ்சாம்ருத அபிஷேகங்களினால் தினமும் பூஜை செய்தார்.

நவ ப⁴க்ஷ போ⁴ஜ்யவ நவ மாடி³ஸி
ப்ரதி தி³வஸத³ல்யு வ்யாஸ ஸேவகனிவ ஸுகி² ||37||

ஒன்பது விதமான பக்ஷ போஜ்யங்களை, புதிதாக செய்து, தினமும் அந்த வ்யாஸமுஷ்டிகளை பூஜித்தார், வ்யாஸரின் ஸேவகரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார்.

ஹிந்த³க்கெ வ்யாஸயோகி³ தந்தி³த்³த³ வ்யாஸ பூஜெ
மத்⁴யத³ மட²த³ல்யு எந்தி³கு நடி³ஸித³ ||38||

முன்னர் வ்யாஸயோகியான (வ்யாஸரின் பக்தரான ஸ்ரீமத்வர் / ஸ்ரீவாதிராஜர்) மத்யவாட மடத்தில் ஏற்பாடு செய்திருந்த பூஜைகளை, அதே விதிப்படி, அந்த மடத்தில் தொடர்ச்சியாக நடக்குமாறு ஸ்ரீவ்ருந்தாவனாசார்யர் செய்தார்.

மோஸ மாடி³த³னெம்ப³ காஸுபா³ளத³வர
ஏஸு மாதுக³ளன்னு பி³ஸாடு³ ஈ³டா³டி³ தூ³ர ||39||

ஒரு முறை, சில துர்குணம் படைத்தவர்கள் குருகளின் மேல் இவ்வாறு அவதூறு பரப்பினர். ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், வ்யாஸ முஷ்டிகளை திருடிக் கொண்டு வந்துவிட்டார் என்றனர். இந்த தவறான வார்த்தைகளை குருகள் கவனத்தில் கொள்ளாமல், புறக்கணித்தார்.

ஸ்ரீவ்யாஸராஜரால் மத்யவாட மடத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட இந்த வ்யாஸ முஷ்டிகள் மறுபடி ஸ்ரீவாதிராஜரால் திரும்பக் கொண்டு வரப்பட்டன. இந்த இரு மஹாஞானிகளின் செயல்களையும் தவறாக புரிந்து கொண்ட சிலரால் இத்தகைய அவதூறுகள் பரப்பப்பட்டன.

அவதூ³த ப்ராயனு அவனியலிவனெந்து³
பு⁴வனேஶ ராணிய ப⁴வனக்கெ கரத³ ||40||

ஆனால், அந்த அரசனுக்கோ ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் மேல் பரிபூர்ண பக்தியும், நம்பிக்கையும் இருந்தது. இந்த அவதூறுகளைப் பற்றி அவரும் சிறிதும் கவனம்

கொள்ளவில்லை. ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், சிறிய வயதிலேயே கடும் வைராக்யத்தைப் பெற்றவர். முற்றும் துறந்தவர். உலகத்திலேயே சிறந்தவர் என அரசன் நினைத்தான். இதனால், அந்த அரசன், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார, தனது அரண்மனைக்கு அழைத்து, அங்கு ஒரு முறை அவரது பட்டத்து பூஜை நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

ப்ரபு[4]வரன்னு ஏகத்ர உப[4]ய ஸமஸ்தா[2]ன
ஶுப[4] வ்யாஸ பூஜெய ஸம்ப்[4]ரம மாடி[3]ஸித[3] ||41||

அந்த சமயத்தில் அங்கு இரு மடாதிபதிகள் இருந்தனர். ஸ்ரீஸோதே மடாதீசருடன், இன்னொரு மடாதீசரும் அங்கு இருந்தார். ஆகவே, அரசனனாவன், இந்த ஸம்ஸ்தானங்களின் பூஜையையும் ஒரே சமயத்தில் அரண்மனையில் மிகவும் விமரிசையாக செய்வித்தான். இதற்காக மிக ப்ரமாண்டமான ஏற்பாடுகளை செய்திருந்தான். அந்த சமயத்தில் அங்கு இருந்து இந்த இரு மடாதீசர்களின் பூஜைகளையும் கண்டு களித்தவர்களே பாக்கியம் செய்தவர்கள்.

பூ[4]மி பதியு நோடெ[3] காமிஸ்தோம கொட்டு
நேமதி[3] வ்யாஸ பூஜெ ஈ முனி மாட[3]லெந்த[3] ||42||

இவ்வாறான திவ்ய பூஜையை கண்டு களித்த அரசனானவன், அந்த பூஜைக்கு தேவையான அனைத்து ஸாமக்ரிகளையும் ஏற்பாடு செய்து கொடுத்து, இனி இந்த வ்யாஸ முஷ்டிகளுக்கு ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரே பூஜை செய்யட்டும் என்று கூறினான். இதை சிலர் தடுக்க முற்படலாம் என்றெண்ணி, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யருக்கு பலத்த பாதுகாப்பும் ஏற்பாடு செய்திருந்தான்.

பே[3]டி[3]த[3] வரத[3]கெ[3] கு[3]ரு மாடி[3]த[3] பூஜெ கண்டு[3]
காடி[3]த ஜனரெல்ல பீ[3]டா[3]டி[3]த[3]ரு அம்ப[3] ஜய ||43||

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் வ்யாஸமுஷ்டிகளுக்கு செய்யும் பூஜையை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்கள், இவ்வாறாக ப்ரச்னைகளுக்கு உள்ளாகி, அவரை வெல்ல முடியாமல் தோற்றுப் போயினர். அவர் முன் எவ்வித சக்தியும் இன்றி குன்றிப் போயினர்.

ப[4]க்தி ஸாரஜ்ஞ ஸுரி திதிய கூடி[3] வ்யாஸ
நுதிய மாடி[3] நித்ய ஸுத்தி தே[3]ஶதி[3] ப[3]ந்த[3] ||44||

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், அவரது ஸஞ்சார சமயத்தில், வ்யாஸ முஷ்டிகளுக்கு பூஜை செய்வதை, நாடு முழுக்க இருந்த புகழ்பெற்ற பண்டிதர்களும் பக்தியுடன் கண்டு களித்தனர். இந்த ஸஞ்சாரத்திற்குப் பிறகு, அவர் உடுப்பிக்கு திரும்பி வந்தார்.

வேத³வ்யாஸர மூர்தி ஸாதி⁴ஸி தந்து³
நந்த³ கந்த³ன கூட³ இட்டு நந்த³தி³ பூஜிஸித³ ||45||

உடுப்பியில் ஸ்ரீவ்ருந்தாவனசார்யார், ஸ்ரீஉடுப்பி கிருஷ்ணனின் பூஜையுடன், ஸ்ரீவ்யாஸ முஷ்டிகளையும் வைத்து தன் பர்யாய பூஜையை மிகவும் விமரிசையுடன் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றினார்.

வேத³ யஞ்ஜ ஜனயுத வேதா³ந்தி விப்ரனிந்த³
ஶுத்³த⁴ மாடி³ஸி யாக³ யாத³வக³ர்பிஸித³ ||46||

வேதங்களை நன்கு கற்றறிந்த ப்ராஹ்மணர்கள் மூலமாக, மிகவும் பவித்ரமாக யாகங்களை மேற்கொண்டு, அனைத்தையும் அந்த யாதவ கிருஷ்ணனுக்கு அர்ப்பணம் செய்தார்.

ப்³ருந்தா³வனாக்²யானதி³ந்தோ³க்த சின்ஹதி³ந்த³
ப்³ருந்தா³வனார்யனிவனெந்து³ க்²யாதி பெத்த ||47||

இத்தகைய சிறந்த யாகத்தை செய்ததான செயல், ஸ்ரீவாதிராஜரால் அவரது ஸ்வப்னவ்ருந்தாவனாக்யான க்ரந்தத்தில் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது. அதைப் போலவே, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் இந்த யக்ஞத்தை செய்திருக்கிறார். ஆகவே, ஸ்ரீராஜர் கூறியபடியே செய்ததால், வ்ருந்தாவனாசார்யார் என்ற தனது பெயரின் ஸார்த்தக்யத்தை பெற்றார்.

ஹத்திது மட²வெந்து³ தூ³தரு பேளெ கு³ரு
எத்தித³ ஹஸ்த நோடி³ அத்தலாகி³து அக்³னி ||48||

ஒரு முறை, சிலரின் கெட்ட செயலால், மடத்தின் முற்பகுதியில் நெருப்பு பற்றிக் கொண்டது. ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் உடனடியாக, அக்னி அந்தர்கதனான ஸ்ரீபரசுராம தேவரை ப்ரார்த்தனை செய்தார். தனது கைகளையும் அக்னியை நோக்கி காட்ட, ஸ்ரீபரசுராம தேவர், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் மேல் செய்த அருளால், அந்த நெருப்பு தானாகவே தணிந்தது.

ஹரிய நிர்மால்யவ தூ³ரி பிஸாடவகே³
தூ³ர போத³னு நேத்ர தா³ரிய பிட்டு விஶ்வ ||49||

வ்யாஸ முஷ்டிகளின் அபிஷேக தீர்த்தம், சமர்ப்பித்த துளசி மற்றும் பூக்கள் - நிர்மால்யம் எனப்படும். அவை மிகவும் பவித்ரமானதாகும். இவற்றை உதாசீனம் செய்த ஒருவரை, ஸ்ரீஹரி அவரது கண் பார்வையை இழக்கச் செய்தார்.

காடவ மாடு³வர மட்டுமாடு³வ ஶக்தி
கொட்டு இவன கூட³ கோ⁴டாஸ்ய மெரெவனு ||50||

குருகளுக்கு ப்ரச்னை / துன்பம் கொடுப்பவர்களை கட்டுப்படுத்தும் / தண்டிக்கும் சக்தியை குருகளுக்கே கொடுத்து, அவருடனேயே எப்போதும் திகழ்ந்தான், ஹயமுகனான ஸ்ரீஹயக்ரீவ ஸ்வாமி.

சித்த ஶுத்³தி⁴யுள்ள உத்தம வ்ருத்³த⁴னிகெ இத்தனு
ஸமஸ்தா²ன மத்தரேனந்த³ரேனே ||51||

ஸ்ரீகிருஷ்ண பூஜையை செய்யும் பாக்கியத்தை ஒரு மிகவும் வயதான க்ருஹஸ்தருக்கு ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் அளித்தார். முற்பிறவியில் ஸ்ரீவேதநிதி தீர்த்தராக இருந்த அவருக்கு தற்போது ஸ்ரீவராஹ தீர்த்தர் என்று பெயரிட்டு, ஸன்யாஸ ஆஸ்ரமத்தை அளித்தார்.

கு³ப்ததி³ க்ருஷ்ண பூஜெ ஆதகு³ கொட்டு கு³ரு
ப⁴க்தவத்ஸயனு யந்த ஸ்துதிய எளகொ³ண்ட³ ||52||

அந்த வயதான ஸன்யாசியும் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் மூலமாக, ருக்மிணியாலும் பிறகு ஸ்ரீமதாசார்யராலும் பூஜிக்கப்பட்ட உடுப்பி கிருஷ்ணனை தொட்டு பூஜிக்கும் பாக்கியத்தைப் பெற்றார். ஸ்ரீவ்ருந்தாவனாசார்யருக்கு இருப்பதான பக்த வாத்ஸல்ய குணம் இதனால் தெரிய வருகிறது.

ஸ்ரீ விஷ்ணுதீர்த² வ்ருத்³த⁴ ஸுவம்ஶத³ல்லி ஜாத
ஸ்ரீவாதி³ராஜ பட்டத³ வகி³த³ஷ்டு யுக்த ||53||

ஸ்ரீவாதிராஜரின் பரம்பரையில் வந்ததாலும் மற்றும் இந்த பரம்பரைக்கு மூலகுருவாக வைராக்ய சிரோமணியாக இருந்த ஸ்ரீவிஷ்ணு தீர்த்தரே இருந்ததாலும், ஸ்ரீவ்ருந்தாவசார்யருக்கு

இந்த இருவரின் குணநலன்கள் அப்படியே வந்திருப்பது ஒன்றும் அதிசயமான செயல் அல்லவே?.

அன்யர ரீதி நோடி³ மன்னிஸி பா³லககெ³
ஸன்யாஸ கொடி³ஸ்யொம்மெ க்ருஷ்ணன பூஜெகி³ட்ட ||54||

ஒரு வயதானவருக்கு ஸ்ரீவராஹ தீர்த்தர் என்று நாமகரணம் செய்து, ஸன்யாச ஆசிரமம் கொடுத்ததை மேலே பார்த்தோம். ஆனால், மற்ற 7 மடங்கள், பால ஸன்யாசிகளையே கொண்டிருந்ததால், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரும் அதற்கேற்ப ஒரு சிறிய வடுவை தேர்ந்தெடுத்து, ஸ்ரீவிஶ்வாதீஶ தீர்த்தர் என்று பெயரிட்டு தனது பட்டத்திற்கு வாரிசாக அவரை அறிவித்தார். ஸ்ரீகிருஷ்ண பூஜையை செய்யும் பாக்கியத்தையும் அவருக்கு அளித்தார்.

ஸாம்ப³வன பெத்தவகெ³ ஒம்ப³த்து நித்ய பூஜெ
ஒப்³ப³னெ மத்து மாடி³ தும்ப³ கீர்தியனைத³ ||55||

உடுப்பி கிருஷ்ண பூஜை என்பது பர்யாய பூஜை எனப்படுகிறது. தினமும் பல காலங்களில் செய்யப்படும் பூஜைகளில் சிலவற்றை பர்யாய ஸ்வாமிஜியே செய்ய வேண்டும் என்னும் விதிப்படி, தனது வயதான காலத்திலும், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரே, ஸ்ரீகிருஷ்ணன் மேல் உள்ள அத்யந்த பக்தியினால் செய்து வந்தார்.

யோகி³ பீ⁴மனகட்டெ ரகு⁴வீர முனிகெ³
நிக³மார்த²வ பேளி மக³னந்திட்டுகொ³ண்ட³ ||56||

பீமஸேது முனிவ்ருந்த மடத்தை (பீமனகட்டெ மடம்) சேர்ந்தவரான யதி ஸ்ரீரகுவீர தீர்த்தர் (ஸ்ரீரகுப்ரவீர தீர்த்தர்), ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரை அணுகி, தன்னை ஸிஷ்யராக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டார். ஒரு தந்தை எப்படி தன் மகனை பார்த்துக் கொள்வாரோ, அப்படியே நம் குருவும் தன் ஸிஷ்யரை பார்த்துக் கொண்டார். இந்த பீமனகட்டெ மடத்தின் மூலகுரு - அச்யுதப்ரேக்ஷாசார்யர். இவரே ஸ்ரீமதாசார்யாருக்கு ஸன்யாச ஆசிரமத்தை வழங்கியவர்.

கோடி துளசி புஷ்ப கோடி நாமவ பேளி
கீடக்கெ ராஜ்யவன்ன கொட்டவக³ர்பிஸித³ ||57||

ஒரு கிருமிக்கு ராஜ்யத்தை அளித்த ஸ்ரீவேதவ்யாஸருக்கு / ஸ்ரீகிருஷ்ணனுக்கு, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், ஒரு கோடி துளஸி, ஒரு கோடி புஷ்பம், ஒரு கோடி நாமங்களை சொல்லி அர்ச்சனைகளை செய்து , அந்த செயல்களை சமர்ப்பணம் செய்தார்.

வேளெகெ[3] அன்னபான கேளுவரிகெ[3] த[4]ன
பேளுவரிகெ[3] ஜ்ஞான கீளாக[3]தி[3]த்த பூர்ண ||58||

ஸ்ரீகிருஷ்ணனை காண வந்த பக்தர்களுக்கு வேளாவேளைக்கு அன்னபானம், அறிஞர்களுக்கு செல்வம், பாடம் கேட்க வந்த ஸிஷ்யர்களுக்கு தக்க பாடங்கள் / உபன்யாஸங்கள் என அவரவர்களின் தகுதி / தேவைக்கேற்ப வழங்கி, அனைவரின் வேண்டுதல்களையும் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் நிறைவேற்றி வைத்தார்.

ஸண்ணவனொப்[3]ப[3] ரூபி அன்னவனுண்டு[3] பாபி
மானவில்லெந்து[3] கோபி கண்ண களத[3] தாபி ||59||

திடமான தேகம் கொண்ட ஒருவன், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் அருளால் ஸ்ரீகிருஷ்ண மடத்தில் வழங்கப்பட்ட திவ்யமான நைவேத்யத்தை உண்டபின், அந்த ப்ரஸாதம் தரமாக இல்லை என்று புகார் கூறினான். இவ்வாறு குருகளின் அந்தர்யாமியான ஸ்ரீஹரியை இகழ்ந்த அந்த மனிதன் உடனடியாக தன் காண் பார்வையை இழந்தான்.

மஶகவில்லத[3]ந்தெ ஶிஶுவிகெ[3] பாலந்தெ
பாஶவு இல்லத[3]ந்தெ பஶுவிகெ[3] ஹுல்லந்தெ ||60||

ஸ்ரீமடத்தின் குருகுலத்தில் படித்த சிறுவர்களுக்கும், மற்ற பாலகர்களுக்கும் திடமான, தூய்மையான பசும்பால் வழங்கப்பட்டது. அதே போல், கோசாலையில் இருந்த பசுக்களுக்கு கல், மண் ஆகியவை அற்ற தூய்மையான புல் வழங்கப்பட்டது.

தீ[3]பக்கெ லெக்[2]க[2]வில்ல - தூ[4]பக்கெ ஸங்க்[2]யவில்ல
மெப்பிகெ[3] மாடி[3]த்[3]தெ[3]ல்லா ஒப்புவ க்ருஷ்ண ப[3]ல்ல ||61||

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் ஸ்ரீகிருஷ்ணனுக்கு காட்டிய தீபத்திற்கு கணக்கே இல்லை. தூபத்திற்கு எண்ணிக்கையே இல்லை.

உண்மையாக (நிஷ்காமமாக) செய்த இந்த அனைத்து செயல்களையும், ஸ்ரீகிருஷ்ணன் அப்படியே ஏற்றுக் கொண்டான்.

நிஜ கு³ரு ஸ்ரீவாதி³ராஜரிட்ட பவன
ராஜகு³ நவவித⁴ பூஜெ மாடி³த³³னேக ||62||

உடுப்பியில் ஸ்ரீகிருஷ்ணனின் சன்னிதிக்கு முன்னர், ஸ்ரீவாதிராஜர் ப்ரதிஷ்டை செய்த ஸ்ரீமுக்ய ப்ராண தேவரின் ஸன்னிதி இருக்கிறது. ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், அந்த முக்யப்ராண தேவருக்கும் ஒன்பது விதமான பூஜைகளை தினமும் செய்து, பவமானரை தனது பக்தியினால் மகிழ்வித்தார்.

ஈ ஶ்வாஸ தே³வரல்லி விஶ்வாஸி வைராகி³யு
த்³வேஷி மானிஸ கொட்ட விஷ த³க்கிஸிகொ³ண்ட³ ||63||

பாற்கடலை கடையும்போது வந்த விஷத்தைக் குடித்தவரான முக்யப்ராண தேவருக்கு செய்த பக்தியுடனான பூஜையின் பலனால், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரும் அவருக்கு ஒருவர் விஷம் கலந்த உணவை அளித்தபோது, அதனை உண்டும் அவருக்கு ஒன்றும் ஆகவில்லை. ஸ்ரீமுக்யப்ராண தேவரே அவரைக் காத்தார். அவரின் அருளால் குருகள், அந்த விஷத்தை எவ்வித ப்ரச்னைகளும் இன்றி ஜீரணம் செய்து கொண்டார்.

ஸர்வஜ்ஞ வம்ஶ ஜாத பு⁴வனத³ல்லீகி³த்³த³
கவிக³ளஷ்டரல்லி இவனதி⁴கனாத³ ||64||

ஸர்வஜ்ஞரின் வம்சத்தில் (பரம்பரையில்) வந்தவரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், அவரது ஸம காலத்தில் இருந்த மற்ற மாத்வ ஸன்யாசிகளைவிட மிகவும் சிறந்த ஞானம் கொண்டவர் என அனைவராலும் புகழப்பட்டு, ஒரு உயர்ந்த ஸ்தானத்தை அடைந்தார்.

ஈ பரி பர்யாயவ பூ⁴பதியந்தெ மாடி³
ஸ்ரீபதி க்ருஷ்ணரிகெ³ தாபஸனர்பிஸித³ ||65||

ஒரு மகாராஜா எப்படி தன் ஆட்சியை மிகச் சிறப்பான செய்வானோ, அப்படியே, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரும் தன் பர்யாய காலத்தை மிகச் சிறப்பாக செய்து, முடித்தார். அனைத்தையும் துறந்து, வைராக்ய சிரோமணிகளாக தன்னையே ஸ்ரீகிருஷ்ணனின் காலடிகளில் சமர்ப்பித்துக் கொண்டார்.

தந்த்ரஸாரதி[3] பேள்வ மந்த்ர யந்த்ரவ கொட்டு
க்ஷேத்ர தீர்த[2]வ ஸுத்தி பாத்ரர பாலிஸித[3] ||66||

ஸ்ரீமதாசார்யார் தனது தந்த்ரஸார க்ரந்தத்தில் சொல்லியிருப்பதற்கேற்பவே ஸ்ரீவ்ருந்தாவனாசார்யர், தனது ஜப, தபங்களை தான, தர்மங்களை செய்து வந்தார். இவ்வாறாக தான் செல்லும் இடங்களிலெல்லாம் ஸஜ்ஜனர்களை காத்து வந்தார். கால்நடையாகவே பல்வேறு தீர்த்த க்ஷேத்திரங்களை தரிசித்தார்.

தடெ[3]யு இல்லத[3]ந்தெ - நடெ[3]யு ஹம்ஸத[3]ந்தெ
மடி[3]யு யோகி[3]யந்தெ - நுடி[3]யு ஶுகனந்தெ ||67||

வ்ருந்தாவனாசார்யரின் சிறப்புகள் / குணங்கள் எவ்வாறு இருந்ததென்றால் அவரை யாராலும் தடுக்க முடியவில்லை. அவர் எவ்வித தடைகளும் இன்றி மிகச் சிறப்பாக பூஜைகளை செய்து வந்தார். அவருடைய நடை ஹம்ஸத்தைப் போல இருந்தது. அவரின் மடி நடவடிக்கைகள் ஒரு சிறந்த யோகியைப் போல இருந்தது. அவருடைய வாக்கு, ஸ்ரீமத் பாகவதத்தை, பரிக்ஷித் மகாராஜாவிற்கு உபதேசம் செய்த சுகாசார்யாரைப் போல இருந்தது.

ஹெக[3]லல்லி தே[3]வரு - ப[3]க[3]லல்லி ப்[3]ராஹ்மரு
பொக[3]ளுத ஹரிய மார்க[3]வ ஸாகி[3]ஸுவ ||68||

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் திக்விஜயத்தின் சிறப்புகள் இந்த பத்யத்தில் சொல்லப்பட்டுள்ளன. தான் நித்யபூஜை செய்யும் பகவந்தனின் விக்ரஹங்களை தன் தோள்களில் ஏந்தி சுமந்து செல்பவராக இருந்தார். அவரது இரு புறங்களிலும் கற்றறிந்த அறிஞர்கள் எப்போதும் ஸ்ரீஹரியின் மகிமைகளையே சொல்லிக் கொண்டு / பாடிக் கொண்டு வந்தனர். இவ்வாறாக குருகள், சிறிதும் சோர்வின்றி தன் பயணத்தை தொடர்ந்து செய்தார்.

இளிய கொட[3]தி[3]ந்த[3] - க[4]ளிகெ[3] தப்பதொ[3]ந்து[3]
மாளிகெ[3] மனெயொந்தே[3] - கா[4]ளிகெ[3] ஹாரிதல்லே ||69||

குருகளின் பயணத்தில் ஒரு நாள், ஒரு இடத்தில் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யருக்கு சரியான வரவேற்பு கிடைக்கவில்லை. இவரது நித்யபூஜைக்கும், மற்ற ஆன்ஹிகங்களை செய்வதற்கும், அந்த இடத்தின் முக்யஸ்தர் இடமும் அனுமதியும் கொடுக்கவில்லை. அன்றிரவு தங்கிச் செல்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. ஆகவே, குருகள் அந்த

இடத்தை விட்டு நீங்கினார். அவர் அப்படி சென்றவுடன், மிகப்பெரிய புயல் காற்று அடித்து, அந்த மாளிகையே தரைமட்டமாகி விழுந்தது.

நதி³கெ³ போகு³வாக³ - மதி³வே தேஜினேரி
ஹாதி³ தடெ³த³ ம்லேஞ்ச² - பீ⁴தி³யொள் பி³த்³த³னல்லே ||70||

ஒரு முறை குருவானவர் தனது பயணத்தில் ஒரு நதியை கடக்க நேரிட்டது. அப்போது அதே பாதையில் எதிரில் வந்த நான்காம் வர்ணத்தவர் ஒருவர் குருகளுக்கு தொந்தரவு செய்தார். அதன் பலனால், அவர் சிறிது தூரம் சென்றபின், ஸ்ரீஹயக்ரீவ ஸ்வாமியின் அருளால், அவர்களின் குதிரை திடீரென்று குதித்து வெறி பிடித்தாற் போல ஓடி, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரை இகழ்ந்த அவர்கள் குதிரையிலிருந்து தவறி சாலையில் விழுந்தார்கள். பின்னர், தாங்கள் செய்த தவறினை உணர்ந்த அவர்கள், குருகளிடம் வந்து மன்னிப்பு கேட்டு வணங்கினார்.

புத்ரார்த²ஂவொப்³ப³ளிகெ³ யந்த்ரார்த²வில்லவெந்து³ - குரு
தந்த்ரார்த² பேளெ - பதி ஹோத³ - பத்ரார்த² ப³ந்து நோடெ³
||71||

ஒரு முறை ஒரு பெண் குருகளிடம் வந்து புத்திர பாக்கியத்திற்காக வந்து வேண்டி, தன் கணவனுக்கு ஒரு யந்திரத்தை அருளுமாறு வேண்டினாள். முக்காலத்தையும் அறிந்தவரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், அவளது கணவன் விரைவில் இறக்கப் போகிறான் என்பதை தன் ஞான த்ருஷ்டியில் கண்டார். ஆகவே, அவளுக்கு எந்த யந்த்ரத்தையும் கொடுக்காமல் அனுப்பி விட்டார். அந்தப் பெண்ணும் தன் வீட்டிற்கு திரும்பி வந்து பார்க்க, அவளது கணவன் அங்கு இறந்து கிடந்தான்.

கூஂல்லக தனதி³ந்த³ பா³லக நகி³தா³டெ³
ஜல்லதொ³ள் பி³த்³த³வகே³ ஹல்லு போகி³த்³து³ சித்ர ||72||

ஒரு முறை, ஒரு சிறுவன், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் நடவடிக்கைகளைப் பார்த்து அவரை கேலி பேசினான். இதனால் கோபம் கொண்ட பூதராஜர், அவனை அடிக்க, அந்த சிறுவனின் பற்கள் உடைந்தன. இதிலிருந்து ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் அருகில் எப்போதும் இருந்து கொண்டு, குருகளுக்கு பூதராஜர் பாதுகாப்பு அளித்து வந்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

த³ண்ட³ களது³ ப³ந்த³ முண்ட³ யதிகெ³ - கு³ரு
த³ண்ட³வ பே³ரெ கொட்டு - மண்ட³ன மாடி³ஸித³ ||73||

இன்னொரு முறை, ஸ்ரீவாதிராஜரின் மற்றும் ஸ்ரீபூதராஜரின் மகிமைகளைப் பற்றி அறியாத வேறொரு மடத்தின் யதி ஒருவர், ஸோதே வந்திருந்தபோது, ஏதோவொரு காரணத்தால் அவருடைய தண்டம் காணாமல் போயிற்று. தண்டம் என்பது ஒரு ஸன்யாசிக்கு மிகவும் அத்யாவசியமான ஒன்று என்பதால், அவர், தனது அறியாமையை மன்னித்துவிடுமாறு, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரிடம் வந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டார். உடனே, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யர் தன்னுடைய தபோ பலத்தால் அவருக்கு அவருடைய தண்டத்தை திருப்பிக் கொடுக்கச் செய்து, அழகு பார்த்தார்.

கடாஹ தொளெதா³ளு - கு³ரு மட²க்கெ ப³ருவாக³
கோடெய பா³கி³லஷ்டு க⁴ட்டந்த பி³ட்டிதல்லே ||74||

முன்பு ஒரு காலத்தில் குருகளுக்கு சேவை செய்தவரான ஒருவர், தற்போது ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் தரிசனம் செய்ய வேண்டும் என்று நினைத்தார். ஆனால், அவர் ஒரு கோட்டையில் இருந்தபோது, வெளியே வரமுடியாமல் உள்ளே மாட்டிக் கொண்டார். பின்னர், குருகளின் அருளால், அந்த கோட்டைச் சுவரே அவருக்கு வழிவிட்டு, வெளியே செல்ல உதவியது.

தூ³ரதே³ஶத³ல்லித்³த³ கு³ருவரன மத்து
ப்³யாரெ தே³ஶத³ ராஜதா³ரிலி கண்ட³ரந்தெ ||75||

வேறொரு உடுப்பி மடத்தின் ஸிஷ்யர் ஒருவர், தீர்த்தஹள்ளி என்னும் இடத்தில் தங்கியிருந்தபோது, அங்கிருந்த துங்கபத்ரா நதியில் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் ஸ்னானம் செய்து கொண்டிருப்பதை கண்டார். மடத்தில் விசாரித்தபோது, குருகளோ அன்று ஸோதேவில் இருப்பதாக தெரிய வந்தது. இந்த சம்பவத்தின் மூலம் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், ஒரே சமயத்தில் இரு இடங்களில் இருக்கக்கூடிய ஸாம்ஶ சக்தியைப் பெற்றிருந்தார் என்பது தெரிய வருகிறது.

நானா புஷ்பத³ல்லொந்து³ தனகா³கி³ பி³த்தெந்து³
மனதி³ நெனவாக³ வனஜ கையல்லித்தெ ||76||

ஒரு முறை, ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் தனது நித்யபூஜையின்போது, தேவ விக்ரஹங்களிலிருந்து நிர்மால்ய

பூக்களை எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது இதனை பார்த்துக் கொண்டிருந்த, கூட்டத்திலிருந்த ஒருவர், அந்த பூக்கள் தனக்கு கிடைக்காதா என்று எண்ண, அந்த பக்தரின் மன ஓட்டத்தை படித்தவரான குருகள், உடனே திரும்பி, கூட்டத்தில் அந்த குறிப்பிட்ட பக்தரை மட்டும் அருகில் அழைத்து, அவருக்கு சில நிர்மால்ய பூக்களை கொடுத்து அவரை மகிழ்ச்சிப்படுத்தினார்.

பவனாம்ஶ பூஜித தே³வர மூர்திக³ள
பாவன ஶிஷ்யரிகே³ ஸேவிஸலெந்து³ கொட்ட ||77||

ஸ்ரீமதாசார்யார் பூஜித்த அரிய விக்ரஹங்களை, பற்பல இடங்களிலிருந்து சேகரித்து அவற்றை தனது அத்யந்த பக்தி கொண்ட ஸிஷ்யர்களுக்கு, அவர்கள் பூஜிப்பதற்காக கொடுப்பதை ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் வழக்கமாக கொண்டிருந்தார். அவரது ஸிஷ்யர்களின் மேல் குருகள் வைத்திருந்த அபரிமிதமான அன்பினையே இந்த சம்பவம் காட்டுகிறது.

ப⁴க்த மாடு³வ பூஜெ ஈதனெ மாடு³வாக³
ஆதகே³ புத்ர புட்டித³ந்தெ பத்ரவு ப³ந்தெ ||78||

வேறொரு இடத்தில் நடப்பதையும் அறிந்தவராக ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் இருந்தார் என்பதை இந்த சம்பவம் காட்டுகிறது. ஒரு முறை பூஜையின்போது, குருகளுக்கு எடபல சேவை செய்யும் ஸிஷ்யரின் வேலையையும், குருகளே செய்து கொண்டார். அன்றே, அந்த ஸிஷ்யருக்கு மகன் பிறந்திருக்கிறான் என்னும் செய்திச் சொல்லி அவருக்கு ஒரு கடிதம் வந்தது.

பும்பா⁴வ இரனொப்³ப³ - இவனம்போ⁴ஜ கரதி³ந்த³
அம்பு³ தளது³கொ³ண்டு ஸம்போ⁴க³ஶாலியாத³ ||79||

ஒரு முறை, புத்ர பாக்கியம் இல்லாத பக்தன் ஒருவன், குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் கரகமலங்களிலிருந்து தீர்த்தம் பெற்று அதனை பருக, அவன் விரைவில் புத்ர பாக்கியத்தை பெற்றான்.

ஒப்³ப³னு வர்ஷ பா⁴ள தும்பி³த³ ம்யாலிவன
அம்பு³ஜ பத³வன்னு நம்பி³ ஸபுத்ரனாத³ ||80||

கடவுள் பக்தி, குரு பக்தி என எதுவும் இல்லாமல் அதிக வயது ஆன ஒருவர், பிறகு ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரைப் பற்றி அறிந்து, அவருடைய தாமரை மலர் போன்ற பாதங்களை சரணடைந்து, சேவை செய்ததால், தன் பெற்றோருக்கு ஒரு சிறந்த புத்ரன் என்று பெயர் பெற்றார்.

பூ[4]காந்த ஸேவகன ஏகாந்த ப[4]க்தனொப்[3]ப[3]
ஸ்ரீமதா[3]க்[2]யான நிஜ தத்வ - லோகக்கெ மெப்பிஸித[3] ||81||

ஸ்ரீபூவராஹ ஸ்வாமியின் சேவகரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் ஏகாந்த பக்தர் ஒருவர், குருகளின் கருணையால் / அருளால், ஸ்ரீஸ்வப்ன வ்ருந்தாவனாக்யானத்தின் நிஜ தத்வத்தை கற்றறிருந்து, அதனை அனைத்து இடங்களிலிரும் பரப்பினார்.

முனிய மனோபா[4]வ த[4]னிகனு திளிது[3]
தீ[3]னகெ[3] கன்யா த[4]ன தா[4]ன்யவ பீ[3]ரித[3]னு ||82||

குருகளின் மனதினை அறிந்த செல்வந்தர் ஒருவர், இத்தகைய அத்யந்த ஸிஷ்யருக்கு, தன் பெண்ணை திருமணம் செய்து கொடுத்து, தன தான்யங்களை அள்ளி வழங்கினார்.

காஶிகெ[3] ஹோகி[3] ஸ்ரீமுஷ்ண வாஸியு க[3]ங்கெ[3] தந்து[3]
மீஸலாகி[3]ட்டு ஸோதா[3] வாஸிவக[3]ர்பிஸித[3] ||83||

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரிடம் ஸ்வாப்ன வ்ருந்தாவனாக்யம் படித்த ஸிஷ்யர் ஒருவர், தன் இடமான ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து வாரணாசி சென்று அங்கிருந்து ஆக்யானம் பாராயணம் செய்து கொண்டே திரும்பி வரும்போது, கங்கா நீரினை கொண்டு வந்தார். அந்த நீரினால் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யருக்கு அபிஷேகம் செய்து, அந்த ஸிஷ்யர் பாக்யசாலி ஆனார்.

ஓது[3] பா[3]ரத[3]வகெ[3] ஸாதி[4]ஸி க்[3]ரந்த[2] பேளி
ஒந்து[3] யாமதி[3] பா[4]ஷ்ய ஓது[3]வ ஶக்தி கொட்ட ||84||

ஓரிரு வாக்கியங்களைக் கூட படிக்கத் தெரியாத படிப்பறிவு அற்ற பக்தர் ஒருவர், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் பாத கமலங்களை நம்பி, குருகளது உபன்யாஸங்களை தொடர்ச்சியாக கேட்டதால், படிப்பறிவு பெற்றார். ஸ்ரீமதானந்த தீர்த்தரின் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்தை பாராயணம் செய்யும் அளவிற்கு பாண்டித்யம் பெற்றார்.

ஜ்ஞானி கொட்டொந்து[3] ரூப்ய மனெயல்லி பூஜிஸெ
மானி தெகெ[3]த[3] ஸால - ஒப்[3]ப த[4]னியு தீரிஸித[3] ||85||

ஒரு முறை குருகள் மேல் இருந்த அத்யந்த பக்தியினால், ஒரு பக்தர், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரிடமிருந்து பெற்ற ஒரு ரூபாய் நாணயத்தை, தனது நித்ய பூஜையில் உள்ள மற்ற விக்ரஹங்களுடன் வைத்து பூஜித்து வந்தார். நாளடைவில் அந்த பக்தர் மிகப்பெரிய செல்வந்தராக ஆனார். தனது கடன் தொல்லைகளிலிருந்து நீங்கினார். இவை அனைத்தும் குருகளின் கருணையே ஆகும்.

ஒந்து[3] ஸ்த[2]ளதி ப[3]ந்து[3] மந்தி[3]ர பாலிஸெந்து[3]
ஸுந்த[3]ர ஹனுமன்ன ச[2]ந்த[3]தி[3] ஸ்தா[2]பிஸித[3] ||86||

தனது திக்விஜயத்தின்போது ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் ஓரிடத்திற்கு வந்து, அங்கு ஒரு ஹனுமந்தனின் மூர்த்தியை ப்ரதிஷ்டை செய்தார். துஷ்டர்களை நிக்ரஹம் செய்பவனும், ஸஜ்ஜனர்களை காப்பவனுமான ஹனுமந்தனின் அந்த விக்ரஹம் மிகவும் அழகாக இருந்தது.

சோள தே[3]ஶத[3]ல்லொப்[3]ப[3] பா[3]லன்ன தன்ன மட[2]-
தாளின்ன மாடி[3]கொண்டு[3] இளெயொளு மெரத[3] ||87||

குரு ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், சோழ தேசத்திலிருந்து வந்த ஒரு சிறுவனை தன்னுடைய ஸிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். அதன்பின், அந்த ஸிஷ்யனின் மொத்த குடும்பமும் ஸோதெ மடத்தின் பக்தர்கள் ஆயினர். இஷ்ட ப்ராப்தி மற்றும் அனிஷ்ட நிவர்த்தி செய்பவராகவே குருவை அந்த குடும்பத்தினர் பார்க்கத் துவங்கினர்.

கு[3]ருராஜ ஹாடக வர பாத[3] பீட[2]வ
ஶிரத[3]ல்லிட்டெனகெ[3] ஹரி தத்வ பேளித[3] ||88||

ஸ்ரீவாதிராஜரின் தங்க பாதுகைகளை என் தலையில் வைத்து ஆசிர்வதித்து, எனக்கு ஸ்ரீமதாசார்யாரின் ஸர்வமூல க்ரந்தங்களில் உள்ள தத்வங்களை கற்றுத் தந்தார். (இதை சொல்வது இந்த க்ருதியை இயற்றியவரான எல்லத்தூர் வேதகர்ப ஸ்ரீஸேதுமாதவ ஸூரி அவர்கள்).

ஶுத்தி[4]கரிஸி என்ன ஸுதீ[4] எந்து[3] மாடி[3]த[3]
ஸித்[3]த[4]னுபகாரவ எந்தி[3]கு[3] நா மரியே ||89||

ஸ்ரீமதாசார்யாரின் தத்வ சாஸ்திரங்களை கற்பித்து, என் அஜ்ஞானத்தை போக்கிய குருகளின் உபகாரத்தை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். அவரது கருணை அபாரமானது.

கு³லகுருராயன கால தொளத³ மண்ண
பா³ல ஹுண்ணின மேலெ கலிஸி ஸுகி²யாத³ ||90||

குலகுருராயனின் (ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின்) கால் கழுவிய மண்ணினை (ம்ருத்திகையை), அடிபட்ட ஒரு சிறுவனின் புண்ணின் மேல் தடவ, அந்தச் சிறுவனுக்கு பிரச்னை நீங்கி நலம் பெற்றான்.

கு³ரு உண்ட³ ஶேஷவ நரனொப்³ப³னுண்டா³க³
தூ³ர ஹோகி³து ரோக³ தூ³ருவரிகெ³ பாப ||91||

குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் உண்ட மிச்சத்தை, சாதாரண ஒரு மனிதன் உண்டு, அவனுக்கு வந்திருந்த வயிற்று வலி தூர விலகியது. கெட்டவர்களின் பாவம் விலகியது. (ஸ்ரீவ்ருந்தாவனாசார்யருக்கு படைத்த ஹஸ்தோதகத்தை உண்டவர்களுக்கு, மேற்கண்ட பலன்கள் கிடைக்கின்றன என்றும் அர்த்தம் சொல்லலாம்).

அபீனரெல்ல கு³ரு கௌபீனவொக³து³ ஆ
அப்பின்னவளகொ³ண்டு³ ஸுபீனராத³ரக்க ||92||

பாவம் செய்தவர்களெல்லாம் குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் கௌபீனத்தை துவைத்து, அந்த கௌபீனத்திலிருந்து தெறித்த ஜலத்தை பானம் செய்து, புண்ணியம் செய்தவர்கள் ஆயினர், அக்கா.

மாயிகோ³ மாயுவொப்³ப³ ம்யாயார்த²² ப³கெ³ கு³ரு-
ராய பேளித்³து³ கேளி வாத³ ப⁴யதி³ நுதிஸித³ ||93||

வேண்டுமென்றே திரித்துப் பேசும் ப்ரதிவாதி (மாயாவாதி) ஒருவன், தன் வாதத்தை ஆணித்தரமாக எடுத்து வைக்க, குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் கூறிய உபதேசங்களை கேட்டு வாதியானவன் மிகவும் பயம் கொண்டான். தான் கூறியது அனைத்தும் தவறு என தன் தோல்வியை ஒப்புக் கொண்டான்.

ஜயிபனிவனெந்து ந்யாயாதி⁴பதி ஒப்³ப³
மாயி மட²த³ முந்தெ³ தை⁴ர்யதி³ மானிஸித³ ||94||

ஸ்ரீமதாசார்யரின் தத்வவாதத்தை ஆணித்தரமாக விளக்கி வாதத்தில் வென்றவர் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரே என நடுவர் அவர்கள் ஒப்புக் கொள்ள, வாதியானவன் (அந்த வழக்கை வென்றபின்) ஸ்ரீமடத்தின் முன்னர் வந்து வணங்கி, குருவிற்கு மரியாதை செலுத்தினான்.

அன்ய வெங்கட ஸூரி ஆனந்த³ ஸூத்ரத³ல்லி முனீந்த்³ரன
உபன்யாஸ ஸுநீதி கேளி நிந்த ||95||

ஒரு சமயம், விஸிஷ்டாத்வைத மதத்தை சேர்ந்த அறிஞர் ஒருவர், குருகளான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் உபன்யாஸத்தை கேட்டு, அவரது அபாரமான ஞானத்தை பார்த்து, அதை எதிர்த்து எதுவும் பேசமுடியாமல் வாயடைத்து நின்றார். குருகளிடம் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு சரணடைந்தார்.

த⁴னியொப்³ப³ பே³டலு ஜ்ஞானிய வசனவ
மானிஸி அவ கொட்ட அன்னக்கெ கை பிடி³த³ ||96||

ஒரு முறை செல்வந்தன் ஒருவன் அளித்த பிக்ஷையை வேண்டாம் என்று நிராகரித்த ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், தனது அத்யந்த பக்தனான, நன்கு கற்றறிந்த ஒரு ஸிஷ்யனின் வீட்டுக்குச் சென்று, அவனது எளிமையான பிக்ஷையை ஏற்றுக் கொண்டார். யோக்யதை அல்லாதவர்களிடமிருந்து எதுவும் பெற்றுக் கொள்ளக்கூடாது என்பதும், குருவின் பக்த வாத்ஸல்யத்தையும் இந்த சம்பவம் காட்டுகிறது.

கு³ருராஜரல்லித்³த³ ஹரிதா³ஸ பூ⁴தனு
தூ³ர தே³ஶத³ வார்தெ கு³ரு கருணதி³ பேள்வனந்தே ||97||

தொலைதூர தேசங்களில் நடக்கும் விஷயங்கள் அனைத்தையும், ஸ்ரீபூதராஜர், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாருக்கு தெரிவிப்பாராம். ஆகவே, இதன் மூலமே, குருகள் அனைத்து இடங்களிலும் என்ன நடக்கிறது என்பதை அறிந்தவராகவே இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

கொச்சி பூ⁴பனக⁴வ கொச்சே பே³காத³ ஸேவெ
மெச்சி ஸாம்ராஜ்யவனு பெச்சிஸி த⁴னியாத³ ||98||

தன் மந்திரியால் ஏமாற்றப்பட்டு, தன் அரசினை இழந்த கொச்சி அரசன் ஒருவன், குரு ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் அருளால் தன் ஆட்சியை திரும்பப் பெற்றான். அவனது அனைத்து

ப்ரச்னைகளையும் தீர்த்து வைத்த குரு, அவனது அனைத்து செல்வங்களையும் அவனுக்கே மீட்டுத் தந்தார்.

மண்ட³லேஶன ஸபே⁴ மண்டி³ஸி வாத³ தீ⁴ர
லண்ட³ மாயிய கக்ஷி க²ண்டி³ஸி நுதனாத³ ||99||

அந்த அரசனின் சபையில், நிறைந்த மாயாவாதிகளின் முன்னிலையில், குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், மத்வ ஸித்தாந்தத்தின் தத்வங்களை ஆணித்தரமாக எடுத்துரைத்து தன் வாதங்களை சொல்லி, துர்மதங்களை கண்டித்தார். குருகளது வாதங்களைக் கேட்டு அங்கிருந்த அனைவரும் அதனை ஒப்புக் கொண்டனர். அரசனின் வேண்டுகோளுக்கு இணங்க, குருகள் அந்த ராஜ்யத்திலேயே சில மாதங்கள் வரை தங்கியிருந்து அனைவருக்கும் அருளினார்.

ராஜமந்த்ரிகெ³ கு³ருராஜனு பா⁴ஷ்ய பேளி
ராஜ மானித கா⁴ளிராஜனல்லித்³து³ ப³ந்த³ ||100||

அந்த அரசனின் மந்திரியின் மேல் கருணை கொண்ட குருகள், அவனுக்கு ஸ்ரீமதாசார்யாரின் ஸூத்ர பாஷ்ய பாடத்தை எடுத்தார். அங்கேயே ஒரு முக்யப்ராண விக்ரஹத்தையும் ப்ரதிஷ்டை செய்தார். (ஸ்ரீஹனுமான் கோயில், சிவ க்ஷேத்ரம், எர்ணாகுளம் என்னும் இடத்தில் இன்னும் அந்த விக்ரஹம் இருக்கிறது). இவ்வாறு ஸ்ரீமடத்தின் தலைமையிடமான ஸோதேவிலிருந்து வெகு தூர தேசமான கேரளத்திலும், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் நிறைந்த பேரும் புகழும் பெற்றார்.

நித்³ராதி தோ³ஷ தூ³ர ப⁴த்ர ஜனக்கெ தப்த
முத்³ரெயனித்து ஜ்ஞான முத்³ரெய தோரித³னு ||101||

அந்த அரசில் பற்பல ஸஜ்ஜனர்களுக்கு தப்த முத்ரா தாரணம் செய்வித்தார் குருகளான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார். அத்துடன் தக்க யோக்யதை உள்ள பக்தர்களுக்கு மத்வ க்ரந்தங்களையும் பாடம் எடுத்து, ஞான முத்ரையையும் அளித்தார்.

உன்னதவாகி³ தி³வ்ய சின்ன மண்டப மாடி³
க⁴ன்ன தே³வர பூஜெ மனவுப்³பி³ மாடி³த³ ||102||

அந்த அரசன் குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யருக்கு மிகச் சிறந்ததான ஒரு தங்க மண்டபத்தை தயாரித்து அதை குருவிற்கு சமர்ப்பித்து, அதில் அவரது ஸம்ஸ்தான மூர்த்திகளை வைத்து

பூஜிக்குமாறு பக்தியுடன் கேட்டுக் கொண்டான். இவ்வாறான அரசனின் வேண்டுகோளை குருவும் மிகவும் மகிழ்ச்சியுடன் நிறைவேற்றினார்.

லெக்கவில்லதே³ க்³ரந்த² லேக²ன மாடி³ கு³ரு
பே³காத³ ஜனரிகெ³ ஸாகெந்தெ³னிஸி கொட்ட ||103||

குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், பற்பல ஸர்வமூல க்ரந்தங்களையும், டீகா க்ரந்தங்களையும் தானே கைப்பட எழுதி, அதை ஸிஷ்யர்களின் தேவைக்காக அவர்களிடம் கொடுத்தார். குருவிடமிருந்து க்ரந்தங்களைப் பெற்ற ஸிஷ்யர்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

க்ருஷ்ணாதி³ மந்த்ரக³ள வர்ணக்கெ லக்ஷ ஜப
நிர்ணயதி³ந்த³ மாடி³ முனிக³ள ம்யாலாத³ ||104||

தனது தினப்படி ஆன்ஹிகத்தின் ஒரு பாகமாக ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், ஸ்ரீகிருஷ்ண மந்த்ர ஜபமே முதலான பற்பல ஜபங்களை செய்தார். ஒவ்வொரு ஜப மந்திரமும் குறைந்த பக்ஷம் ஒரு லக்ஷம் முறையாவது செய்தார். இதன் மூலமே அவர் மந்த்ர ஸித்தியை பெற்றவர் என்பது தெரிய வருகிறது. முனிவர்களில் மிகச் சிறந்தவர் என அனைவராலும் போற்றப்படுபவர் ஆனார்.

பிஶாச பூ⁴தக³ளு ஶ்ரீஶ தா³ஸன்ன கண்டு³
ஆஶெய நீகி³ தூ³ரதே³ஶத³ல்லோடு⁴வது³ ||105||

கெட்டதான பிசாசு, பூதங்கள் ஆகியவை ஸ்ரீஹரியின் தாஸரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரை கண்டு, அவரை துன்புறுத்த வேண்டும் என்கிற தங்களின் ஆசையை நீங்கி, தூர தேசத்திற்கு ஓடிப் போயின.

கலிய தூ³ர மாடி³ ஆலஸ்ய பி³ட்டு கு³ரு
மூல மூவத்தேளு எல்லி கேளலு பேளுவ ||106||

கலியை முழுவதுமாக தன்னிடமிருந்து விலக்கி, சோர்வினை விட்டவரான குரு ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், ஸ்ரீமதாசார்யாரின் ஸர்வமூல க்ரந்தங்களான 37 கிரந்தங்களையும் முழுவதுமாக கற்றுத் தேர்ந்து, அதில் எந்த க்ரந்தத்தில், எந்த விஷயத்தைப் பற்றி கேட்டாலும் விளக்குபவராக திகழ்ந்தார்.

வாதி[3]ராஜர பஞ்ச ப்[3]ருந்தா[3]வன மஹிமெ
ஈ த[4]ரெயொளகி[3]வ போ[3]தி[4]ஸி ஹரவித[3] ||107||

ஸ்ரீவாதிராஜரின் பஞ்ச ப்ருந்தாவனத்தின் & ஸ்வப்ன வ்ருந்தாவனாக்ய க்ரந்தத்தின் மகிமைகளைப் பற்றி, இந்த பூமியில் உள்ள ராஜரின் பக்தர்கள் அனைவருக்கும் போதித்து, அவற்றின் மகிமைகளை பரப்பினார்.

மத்து ஸுதா[4]தி[3] க்[3]ரந்த[2] முத்து போணிஸித[3]ந்தெ
நித்ய பேளுவரல்லி - ஈதகெ[3] ஸரி யாரே ||108||

இவற்றுடன், ஸ்ரீமத்கோக்ருத்பாதரின் ஸ்ரீமன் ந்யாய ஸுதாவே முதலான அனைத்து க்ரந்தங்களையும், முத்து மாலை கோர்த்ததைப் போல , தினமும் அனைவருக்கும் உபன்யாஸம் செய்து கொண்டிருந்தார். இத்தகைய மகிமைகளைக் கொண்ட இவருக்கு இணை என்பவர் யார் இருக்கிறார்கள்?.

ஒந்து[3] க்[3]ராமத[3]ல்லித்[3]து[3] ப[3]ந்த[3] ப[4]க்தரிகெ[3]ல்ல
ஒந்து[3] தர வார்த[2] பாட[2] போ[3]தா[4]ப்[3]தி[3] ஸாகி[3]ஸித[3] ||109||

ஒரு முறை, ஒரு கிராமத்திலிருந்து வந்த பக்தர்களுக்கெல்லாம் ஸ்ரீமதாசார்யாரின் ஸர்வமூல க்ரந்தங்களை பாடமாக எடுத்து அவர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.

ஈ ரீதி தன்ன பாத[3] ஸேரித[3] ஜனரிகெ[3]
மூரொந்து[3] புருஷார்த[2] பீ[3]ரித[3] ப[3]ஹுகால ||110||

இவ்வாறாக தன்னைத் தேடி வந்து சரணடைந்த மக்களுக்கு / பக்தர்களுக்கு, தர்ம, அர்த்த, காம, மோக்ஷ என்பதான நான்கு வித புருஷார்த்தங்களையும் அருளினார்.

வராஹதீர்த[2]னெம்ப[3] எரட[3]ணே ஸ்ரீபாத[3]னு
பர ஸித்தி[4]யனைத[3]லு - ஹரி ஸங்கல்பவெந்த[3] ||111||

ஸ்ரீவராஹ தீர்த்தர் என்னும் இன்னொரு யதியானவர் (இவரே முற்பிறவியில் ஸ்ரீவேதநிதி தீர்த்தராக இருந்தவர் என நம்பப்படுகிறது), ப்ருந்தாவனஸ்தர் ஆனதை கேள்விப்பட்டு, அதுவே ஹரி ஸங்கல்பம் என்று கூறினார்.

ஈடு[3] இல்லதெ[3] பூ[4]மிகொ[3]டெ[3]யகெ[3] பூஜெய
பி[3]ட[3]தெ[3] மாடி[3] புண்ய பட[3]த[3] வயோவ்ருத்[3]த[3] ||112||

பூமிக்கு தலைவனான ஸ்ரீவராஹ ஸ்வாமிக்கு (ஸ்ரீமன் நாராயணனுக்கு), எவ்வித ஈடுமின்றி, தங்கு தடையின்றி பூஜையை செய்து, அபாரமான புண்ணியத்தை பெற்றார் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார்.

ஸட³க³ர பூஜெய கு³ரு - நடெ³ஸல்லவெந்த³ந்த³³
மூட⁴னு புரோபா⁴கி³ கடெ³கெ³ தோ³ஷபா⁴கி³ ||113||

குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், ஸ்ரீமதாசார்யார் மற்றும் ஸ்ரீவாதிராஜர் விதித்த விதிகளின்படி பூஜையை செய்யவில்லை என்று அபவாதம் செய்த சில கெட்டவர்கள், கடைசியில் அவர்கள் கூறியதே தவறு என்ற தோஷத்தை கொண்டவர்கள் ஆனார்கள்.

எல்லி பே³டி³த³³ரல்லி - நில்லுவ த³³யாநிதி⁴ - கூஊல்லக-
ரல்லி - காலு க⁴ளிகே³ - நில்லவொல்ல ||114||

குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசர்யார், ஹரி ஸர்வோத்தமத்வத்தை திடமாக நம்பும் தன் பக்தர்கள் எங்கு இருக்கிறார்களோ / வேண்டுகிறார்களோ, அங்கு வந்து அவர்களுக்கு அருளும் தயாநிதியாக இருந்தார். ஸ்ரீஹரியின் ஸர்வோத்தமத்வத்தை நம்பாத / எதிர்க்கும் மனிதர்கள் இருந்த இடங்களில், புறக்கணிக்கதக்கதான கோயில்களில் அவர் ஓரடிகூட எடுத்து வைத்ததில்லை.

எல்லா தே³ஶத³ல்லித்³த³³ ப³ல்லித³³ ஶிஷ்யரெல்ல
ஸல்லோக கு³ரு வாக்ய ஸல்லிஸி பா³ளுவரு ||115||

குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் உபதேசங்களைப் பெற்ற அவரது ஸிஷ்யர்கள், தொலைதூரமாக எந்த இடத்திற்கு சென்றாலும், அவர்கள் அனைவரும் குருவின் வாக்கிற்கேற்பவே வாழ்ந்து, அவரது முழுமையான அருளைப் பெற்று அதன் மூலம் நலன்களையும், மகிழ்ச்சியையும் பெற்றனர் (பெறுகின்றனர்).

கந்துபிதன நித்ய ப்⁴ருத்ய ராஜர க்ருபெ-
யித்து ஈ யதியல்லி எந்திஹதோ³ திளியே ||116||

கந்துபிதனான ஸ்ரீஹரியின் நித்ய ஸேவகரான ஸ்ரீவாதிராஜரின் கருணையானது, நம் குருவான இந்த யதியில், ஸ்ரீப்ருந்தாவனாசார்யாரில் எவ்வளவுதான் இருக்கிறதோ? நமக்குத் தெரியாது. (அபாரமாக இருக்கிறது - என்று அர்த்தம்).

தூ³ரத³ல்லிரெ யதி பெ³ரகா³கொ³ம்மெ ஸோதா³-
புரக்கெ ப³ந்து³ கு³ரு சரண க³தியெந்த³ ||117||

தாம் ஸஞ்சாரத்தில் இருக்கும்போது, வெகு தூரத்தில் இருந்தாலும், எப்போதெல்லாம் குரு ஸ்ரீவாதிராஜரின் அழைப்பு (ஸூசனை) வருகிறதோ, அப்போதெல்லாம் ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், ஸோதாபுரத்திற்கு ஓடோடி வந்து, தம் குருவின் (ஸ்ரீவாதிராஜரின்) சரணமே கதியென்று இருந்தார்.

ஸ்ரீ ராஜராஞ்ஜெயன்னு ஶிரத³ல்லி த⁴ரிஸி
கு³ரு உடு³பியல்லி ஸ்தி²ரவாகி³ நிந்தனு ||118||

ஸ்ரீவாதிராஜரின் ஆணையை தலையில் ஏந்தி, குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யர், உடுப்பியில் ஸ்ரீகிருஷ்ணனின் சேவையை செய்தவாறு நிரந்தரமாக அங்கேயே தங்கினார்.

புத்ரிகெ³ யதிவர ஈதகெ³ ப⁴க்தனாகி³
மத்து ஸேவெய மாடி³ கீர்தி பெச்சிஸிகொ³ண்ட³ ||119||

அந்த சமயத்தில் இருந்த பீமஸேன முனிவ்ருந்த மடாதீஶரான ஸ்ரீரகுப்ரவீர தீர்த்தர், நம் குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாருக்கு பக்தராகி, அவருக்குத் தேவையான சேவைகளை செய்து, தன் புகழை / புண்ணியத்தை அதிகரித்துக் கொண்டார்.

ஆ வேளெ ரகு⁴வீர பா⁴வஞ்ஜ யதி ப³ந்து³
பாவன கு³ரு பாத³ ஸேவகனாத³ நோடு³ ||120||

அந்த சமயத்தில் இருந்த பீமஸேன முனிவ்ருந்த மடாதீஶரான ஸ்ரீரகுப்ரவீர தீர்த்தர், நம் குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாருக்கு பக்தராகி, பவித்ரமான குரு பாதங்களின் சேவகன் ஆனார், பாரம்மா.

மஜ்ஜன மாடி³ ஹொத்து ஹெஜ்ஜெய நோடி³ தே³வ
பூஜெ நடி³ஸி த்³விஜ போ⁴ஜனவாக³லெந்த³ ||121||

குறிப்பிட்ட அந்த நாளில், ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், வழக்கப்படி, ஸ்னானம் செய்து, அந்தந்த வேளைக்கான பூஜையை தாமதமின்றி விதிப்படி செய்து, ஸ்ரீகிருஷ்ணின் பாதத்தைப் பார்த்தவாறு பூஜை செய்து பின், உடனடியாக ப்ராஹ்மணர்களின் போஜனம் ஆகட்டும் என்றார்.

ஜனரு மொரெயிடெ³ ஜ்ஞானி பீ⁴மனகட்டெ
முனிய நோடி³ முந்தெ³ த⁴ன்யராக³லி எந்த³ ||122||

அந்த சமயத்தில், அங்கிருந்த ஸிஷ்யர்கள் அனைவரும், அதுவே தம் குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் அந்திம காலம் என்பதை அறிந்தனர். அடுத்து அவர்களை யார் வழிகாட்டுவார்கள் என்று கேட்டதற்கு, குரு ஸ்ரீரகுப்ரவீர தீர்த்தரை கைகாட்டினார். அனைவரும் தன்யரே ஆகட்டும் என்று அனைவரையும் ஆசிர்வதித்தார். தன் ஸிஷ்யரான ஸ்ரீரகுப்ரவீரேந்த்ர தீர்த்தர் மூலமாக 'வ்ருந்தாவனாக்யான ப்ரமாண்ய ப்ரபோதினி' என்னும் க்ரந்தத்தையும் இயற்றச் செய்தார்.

காஷாய த³ண்ட³த⁴ர ஆஷாட³ த³ர்ஶத³ல்லி
தோ³ஷிகெ³ மரெயாத³ தா³ஸகெ³ தோருவனு ||123||

காஷாயத்தை தரித்து, தண்டத்தை பிடித்தவரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், க்ரோதன நாம ஸம்வத்ஸரம் ஆஷாட அமாவாசையன்று ப்ருந்தாவனஸ்தர் ஆனார். தோஷம் உள்ளவர்களின் கண்பார்வையிலிருந்து அவர் மறைந்தார். தன் பக்தர்கள் / ஸிஷ்யர்கள் / தாஸர்களுக்கு மட்டுமே அவர் தெரிபவர் ஆனார்.

சின்ன மூரணெ யதி உன்னத தே³வபூஜெ ஆ-
தி³ன்னத³லொப்புகொண்ட³ க⁴ன்ன ராஜர சித்த ||124||

சிறியவரான யதி (ஸ்ரீவிஶ்வாதீஶ தீர்த்தர்) அன்றைய நாளின் சிறந்ததான தேவபூஜையை செய்வதற்கு ஒப்புக் கொண்டார். அதுவே ஸ்ரீவாதிராஜரின் சித்தமாக இருந்தது.

அனுதாப பூர்வக முனி விஶ்வாதீ⁴ஶேந்த்³ர - ஆக³
ஜனக்கெ அன்ன வஸ்த்ர த⁴னவ ஸுரிஸித³ ||125||

தபஸ்வியான ஸ்ரீவிஶ்வாதீஶ தீர்த்தர், அன்று வந்திருந்த மக்கள் அனைவருக்கும் மிகவும் பக்தி மரியாதைகளுடன் அன்ன, வஸ்த்ர, செல்வம் ஆகியவற்றை வாரி வழங்கினார்.

ஈ ஸுத்³தி³ கேளி கு³ரு ஶிஷ்யரு அல்லிக³ல்லி
வஸனான்ன த³க்ஷிணெ தா³ஸரிகி³த்தரம்ம ||126||

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் பிருந்தாவனஸ்தர் ஆன செய்தியைக் கேட்டு, அஷ்ட மடத்து குரு, ஸிஷ்யர்கள் அனைவரும் அங்கங்கு, ப்ராஹ்மணர்களுக்கு / பக்தர்களுக்கு அன்ன, வஸ்த்ர, தக்ஷிணை ஆகியவற்றை வழங்கினர் அம்மா.

வாகீ³ஶதீர்த²ரித்³த³ பா⁴க³தி³ க்ருஷ்ணஸங்கீ³
யோகி³ ப்³ருந்தா³வனதி³ ஈக ஸேவெயகொ³ம்ப³ ||127||

உடுப்பி ஸ்ரீகிருஷ்ண மடத்தில், ஸ்ரீவாகீஶ தீர்த்தரின் (ஸ்ரீவாதிராஜரின் ஆஸ்ரம குரு) பிருந்தாவனத்திற்கு அருகில், ஸ்ரீகிருஷ்ண பக்தரான யோகியான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் தன் ப்ருந்தாவனத்தில் இருந்து கொண்டு தற்போது அனைவரிடமிருந்தும் ஸேவையை பெற்றுக் கொண்டிருக்கிறார்.

கனஸினல்லாத³ரு என்ன கண்ணிகெ³ கு³ரு
அனுதி³ன தோரலி என்னுத பே³டி³கொம்பெ³ ||128||

நம் குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார், என் கனவிலாவது தினமும் வந்து, எனக்கு தரிசனம் அளிக்கட்டும் என்றே அவரது பக்தர்கள் அனைவரும் அனுதினமும் வேண்டிக் கொள்கிறார்கள்.

ஆடித்³து³ வேத³மந்த்ர - கு³ரு - மாடித்³து³ புண்யகார்ய
நோடி³த்³து³ த³யா வ்ருஷ்டி - நீடித்³து³ வரக³ளு ||129||

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யார் கூறியது அனைத்தும் வேத மந்த்ர துல்யமான வாக்கு. குருகள் செய்தவை அனைத்தும் புண்ணிய காரியங்களே. அவர் பார்த்த பார்வையானது - கருணை நிறைந்த பார்வை. அவர் அளித்த அனைத்தும் வரங்களே.

பாண்டு³ரங்க³ன்ன ஸதா³ கூடி³த்³த³ பாண்ட³வரன்ன
புண்ட³ரு கண்ட³ மாதனாட³லேனாகி³தம்ம ||130||

முந்தைய ஸ்லோகத்தில் கூறியது எப்படி இருக்கிறது என்றால், பாண்டுரங்கனான ஸ்ரீகிருஷ்ணனுடன் எப்போதும் உடனிருந்த பாண்டவர்களுக்கு, கிருஷ்ணன் செய்த செயல்கள் அனைத்தும் நன்மைகளையே கொடுத்தன. ஆனால், அதே செயல்கள், துஷ்டர்களான கௌரவர்களுக்கு மிகவும் கஷ்டத்தையும், துக்கத்தையும் அளித்தன.

இன்னிந்த கு³ருகெ³ணெ இன்னொப்³ப³ரனு காணெ
இன்னிந்தவரனாணெ இன்னாரு திளி ஜாணெ ||131||

இவரைப் போன்றதான குருவிற்கு இணை என்பது யார்?. வேறொருவர் யாரையும் நான் காணேன். அது இவர் மேல் ஆணை. (அப்படி வேறு யாரும் இல்லை என்று அர்த்தம்). இதை நீ நன்றாக அறிந்து கொள்வாயாக.

எஷ்டோ மஹிமெயீத குண்டவாத³ரு திளி
து³ஷ்டு பேளுவுத³க்கெ துஷ்டரு பா⁴ளவஷ்டெ ||132||

ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரைப் பற்றி சொல்வதற்கு எவ்வளவு மகிமைகள் இருந்தாலும், எனக்கு தெரிந்தவரையில் சிலவற்றை மட்டும் கூறியிருக்கிறேன். எப்போதும் குற்றம் கண்டுபிடிக்கும் துஷ்டர்கள் மிகவும் அதிகமாக இருப்பதால், மிகவும் அதிகமாக விளக்கவில்லை.

இல்லி பேளித³ கதெ² அல்லல்லிருவ ஜன-
ரெல்லரு ப³ல்லரிது³ ஸுள்ளல்ல நிஜ தங்கி³ ||133||

இங்கு (இந்த க்ருதியில்) கூறிய கதையானது, அங்கங்கு இருக்கும் (ஸ்ரீவாதிராஜரின் / ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின்) பக்தர்கள் அனைவரும் அவசியம் அறிய வேண்டியதே. இதில் நான் கூறியவைகள் எதுவும் பொய் இல்லை, தங்கையே.

நித்யத³ல்லி பத³வ ப்ராத காலத³லெத்³து³
சித்தவிட்டு படி²ஸெ சித்தஜனய்ய காவ ||134||

இந்த க்ருதியை யாரொருவர் தினமும் காலையில் எழுந்து ஒருமனதுடன் (கவனத்துடன்) படிக்கிறாரோ, சித்தஜனய்யனான ஸ்ரீஹரி அவரை காப்பான்.

ஈதகெ பாத³ஸேவெ ஸேதுமாத⁴வனெம்ப³ ப⁴க்த
மாடி³த³ க்ருதி கூஹியொள் மெரெயலி ||135||

இவ்வாறு மகிமைகளைக் கொண்டவரான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யரின் பாதஸேவையாக, ஸேதுமாதவ ஸூரி என்னும் பக்தன் செய்த இந்த க்ருதி, இந்த உலகில் அனைத்து பக்தர்களுக்கு மத்தியில் பரவட்டும்.

ஸுஜனரிகோ³ஸுக³ விஜய ஹயக்³ரீவ ஈ ஜக³த்கு³ரு
கு³ணராஜீய நுடி³ஸித³ ||136||

ஸஜ்ஜனர்களின் நலனுக்காக ஸ்ரீவிஜய ஹயக்ரீவனே எனக்குள் அந்தர்யாமியாக நின்று, இந்த ஜகத்குருவான ஸ்ரீவ்ருந்தாவனாசார்யாரின் குணங்களைப் பற்றி பாடச் செய்தான்.

||இதி ஸ்ரீ குருலீலா விலாஸ ஸம்பூர்ணம் ||
|| இத்துடன் ஸ்ரீகுருலீலா விலாஸ க்ருதி முடிவடைந்தது ||

ஸ்ரீ ஸேதுமாதவாசார்ய அந்தர்கத ஸ்ரீ விஶ்வப்ரிய தீர்த
குர்வந்தர்கத ஸ்ரீ வாதிராஜாந்தர்கத மத்வேஶார்பணமஸ்து

•••••